Registered as a Newspaper

ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!
"பூகோட"
தயாரிப்புக்களின் பிடவைத்தினுசுகளுக்கு வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
"ராஜ்கோபால்ஸ்"
பூகோட மொத்த, சில்லறைவிற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2.50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
"ராஜ்கோபால்ஸ்"
(பட்டுச் சேலைகளின் சாட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கர: 4 விபவ ஞூ தை மீ 26 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 30 (08-02-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 65

## அமைதிப்படை: மற்றொரு பிரிவு இன்று திரும்பும்

## காங்கேசனிலிருந்து புறப்பாடு

### அடுத்த பிரிவு 2 வாரங்களில் போகும்

கொழும்பு, பெப்ரவரி 8

இந்திய அமைதிப் படையின் ஒரு பிரிவு (பட்டாலியன்) இன்று புதன்கிழமை திரும்பிச் செல்லும் என்று இலங்கை, இந்திய தரப்புகளில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. பிரஸ்தாபபிரிவு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும். இந்தப் பிரிவில் 1,500 துருப்புகள் இருப்பர் என அறியப்படுகிறது.

இந்திய அமைதிப் படையின் மற்றொரு பிரிவு இன்னும் இரண்டு வாரங்களில் திரும்பும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் ஏற்கனவே இரண்டு படைப் பிரிவுகள் சென்ற மாதம் விலக்கப்பட்டது தெரிந்ததே.

இந்திய அமைதி படையின் இரண்டு பிரிவுகள் (பட்டாலியன்கள்) வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து தாயகம் புறப்படும்.

முதலாவது பிரிவு காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து இன்று புதன்கிழமை தாயகம் புறப்படுகிறது.

இன்று தாயகம் திரும்பும் இந்தியாவின் முதலாவது பட்டாலியனில் 1,500 ஜவான்கள் இருப்பர் என்று அறிவிக்கப்படுகிறது.

அடுத்த பிரிவு இரண்டு வாரகாலத்தினுள் தாயகம் திரும்பும் என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

[8-ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



விசர் நாய்கடிக்கு வேணும், இப்ப நுளம்புக் கடிக்குத்தான் ஒரு மருந்து அவசரமாய் கண்டுபிடிக்க வேணும் கண்டியளோ......!

## யாழ். இலங்கை வங்கிக்கு வானொலி தொலைபேசிச் சாதனம்

யாழ்ப்பாணம், பெப் 8

இலங்கை வங்கியின் யாழ் பிராந்தியத் தலைமையலுவலகத்துக்கு வானொலி, தொலைபேசிச் சாதனம் (Radio Telephone Equipment) ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

சீபாங்க் வீசா அட்டை (Credit Card System) முறையை யாழ் நகரில் அறிமுகப்படுத்துவதற்கு உதவியாகவே இந்தசாதனம் பெற்றுக்கொள்ளப்படவிருக்கிறது.

வடமாகாணத்தில் சீபாங்க் வீசா அட்டை முறையை அறிமுகப்படுத்துவதுதொடர்பாக அடுத்த வாரம் கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

இலங்கை வங்கியின் யாழ் பிராந்தியத் தலைமையலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறது.

வானொலி தொலைபேசிச் சாதனம் ஒன்றை யாழ்ப்பாணத்துக்குக் கொடுத்துதவும் படி இந்த மாநாட்டில் அவர்கள் கோரிக்கை விடுப்பார்கள் எனத் தெரியவருகிறது. (ஒ-ஐ-10)

## மக்கள் வங்கி கிளைகளில் அடகு நகை மீளளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

அடகு நகைகளின் மற்றொரு தொகுதி நேற்று மக்கள் வங்கி கிளைகள் மூலம் விநியோகிக்கப்பட்டது.

சங்கானைக் கிளையில் அடகு வைத்த 60 பேருக்கு ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் —

புங்குடுதீவுக் கிளையில் அடகு வைத்த 89 பேருக்கு பிரதான வீதிக்கிளையிலும் —

அதே வங்கியில் அடகு வைத்த 46 பேருக்கும் அடகு நகைகள் விநியோகிக்கப்பட்டன. (ஒ 10)

### வ. பி. போ. சவுக்கு

## இரண்டு புதிய பஸ்கள் நேற்று வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம், பெப் 8

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு இரண்டு நவீன சிறிய பஸ்கள் நேற்று வந்து சேர்ந்தன.

ஒற்றைக் கதவைக் கொண்ட 'ஈ' வகுப்பைச் சேர்ந்த இந்த பஸ்கள் இந்தியாவில் உடற்கோப்பு (பொடி) செய்யப்பட்டவையாகும்.

மத்திய போக்குவரத்துச் சபையினால் இந்த பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இதே ரகத்தைச் சேர்ந்த இரண்டு பஸ்கள் ஏற்கனவே பருத்தித்துறை சாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஒ-10)

## ஜானகிக்கு தலைமையகம்: ஒப்படைக்க கால அவகாசம்

சென்னை, பெப். 8

சென்னையில் உள்ள அ.தி.மு.க. தலைமைக் காரியாலயத்தை ஜானகி அணியிடம் ஒப்படைப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை சென்னை உயர் நீதிமன்றம் நீடித்துள்ளது.

இம்மாதம் 7-ஆம் திகதிக்கு முன்னர் அ.தி.மு.க. தலைமைக் காரியாலயத்தை ஜானகி அணியிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் ஜெயலலிதா அணிக்கு உத்தரவிட்டிருந்தது.

இதை எதிர்த்து ஜெயலலிதா அணி சமர்ப்பித்த விசேட விண்ணப்பத்தை நேற்று சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

அதைத் தொடர்ந்து கட்டடத்தைஒப்படைப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டது. (ஒ-எ)

### வடக்கு, கிழக்கில்

## குடிதண்ணீர் வசதியை அபிவிருத்தி செய்ய முயற்சி

யாழ்ப்பாணம், பெப் 8

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிதண்ணீர் வசதியை அபிவிருத்தி செய்வதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயமும் யூனிசெப் ஸ்தாபனமும் கூட்டாக முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கின்றன.

இதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் மேற்படி இரு ஸ்தாபனங்களைச்சேர்ந்த பிரதிநிதிகளுக்கிடையேயும் நடைபெற்றன.

இது தொடர்பான அடிப்படை ஆய்வு ஒன்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டும் என இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது முடிவு செய்யப்பட்டது.

இதேவேளையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் வடக்கு கிழக்கு

[8 ஆம் பக்கம் பார்க்க]

## விசர் நாய்க் கடிக்கு புதிய ஊசி மருந்து!

### நூறுவீத பாதுகாப்புத் தரும்

புதுடில்லி, பெப். 8

விசர்நாய்க் கடிக்கு புதியதொரு ஊசி மருந்தை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஹைட்ரோபோபியா (Hydrophobia) என்ற இக்கொடிய நோயிலிருந்து நூறு வீத பாதுகாப்பு அளிக்க வல்லது இந்த மருந்து.

'தட்சிணியா' என்றழைக்கப்படும் இந்த ஊசி மருந்து சுண்டெலிமீது வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது என்று தேசிய நோய்த் தடுப்பு இயக்க விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

புதுடில்லியில் உயிரின விஞ்ஞானங்கள் பற்றிய இந்திய - பிரெஞ்சுக் கருத்தரங்கு ஒன்றில் அந்த விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் ஆண்டு தோறும் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி 20 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர். (உ-எ)

## நீர்வேலியில் வேட்டுக்கள்

யாழ்ப்பாணம், பெப் 8

நீர்வேலி வடக்குப்பகுதியில் நேற்றுமாலைசுமார் 5 மணியளவில் பலத்த துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. இடையிடையே குண்டுச் சத்தங்களும் கேட்டன.

மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (ஒ)

### கொழும்பில் வர்த்தகர்கள் கொலை:

## சிங்களத்தில் பேசிய வாலிபர்களே சுட்டனராம்

கொழும்பு பெப் 8

நேற்று முன் தினம் கொழும்பு, புறக்கோட்டையில் இனந்தெரியாத நபர்களினால் இரண்டு தமிழ் வர்த்தகர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் அல்லவா!

இச் சம்பவம் பற்றி கிடைத்த மேலதிக தகவல்கள் வருமாறு!

புறக்கோட்டை அரசமரச் சந்தியில் இருந்து சுமார் பத்து யார் தொலைவில் கொல்லப்பட்டவர்களின் வர்த்தக நிலையம் உள்ளது.

கடையில் வர்த்தகம் நடந்து கொண்டிருந்த சமயம் துப்பாக்கி வாலிபர்கள் உள்ளே புகுந்தனர்.

'ஒருவரும் எழுந்திருக்கக் கூடாது' என்று துப்பாக்கி வாலிபர்களில் ஒருவர் சிங்களத்தில் உத்தரவு பிறப்பித்தார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் சூட்டுச் சத்தம்

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றிரவு 7.30மணியளவில் பரவலாகத் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

சேத விவரம் தெரியவரவில்லை. (ஒ)

### சுபநேரம்

08-02-1989
தை-26
புதன்கிழமை
சுபநேரம்:
05.5 முதல் 06.35 வரை
ராகுகாலம்:
12.35 முதல் 02.05வரை
விபூதிப்புதன்

## 5 ஐ. தே. க. ஆதரவாளர் சுட்டுக்கொலை

கொழும்பு பெப். 8

தென்பகுதியில் கடந்த திங்கள் இரவு மட்டும் 5 ஐ தே க ஆதரவாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் நான்கு பேர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். [ஒ]

## குண்டுவீச்சு

கல்கிசை நீதிமன்றத்திற்கு அருகில் நேற்று முன்தினம் காலை 11மணியளவில் இனந்தெரியாத நபர் குண்டு ஒன்றை வீசினார். குண்டுவீச்சில பெண் உட்பட 8பேர் காயமடைந்தனர்.

நீதிமன்ற வீதி வழியாக வாகனம் ஒன்றில் வந்தவர்களே குண்டை வீசினர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## அதிபர் உயிரிழந்தார்

கொழும்பு பெப் 8

பெந்தோட்டையில் கொம்பலா வித்தியாலய அதிபர் சிறிசேன ஜெயசேகரா இனந்தெரியாத நபர்களினால்கடந்த வெள்ளிக்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் தீவிர ஐ.தே.க ஆதரவாளர் என்று சொல்லப்படுகிறது. (உ-எ)

## தம்பதியர் சுட்டுக்கொலை

கொழும்பு, பெ 8

பாணந்துறையில் கூட்டுறவுச் சங்க இயக்குனர் அபேரத்தின ஆட்டிகலவும் அவரின் மனைவி மிலினுதயா ஆட்டிக்கலவும் இனம் தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கார் ஒன்றில் வந்த கோஷ்டி ஒன்று வீட்டினுள் நுழைந்து கணவனையும் மனைவியையும் சுட்டுவிட்டுத் தலைமறைவாகியது. அபேரத்ன ஆட்டிகல கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஐ தே க வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தவர். (உ-எ)

## புதன், வியாழனில் யாழ்தேவி ரயில்சேவை

### சனி, ஞாயிறில் நடைபெறாது

கொழும்பு, பெப் 8

கொழும்பு - யாழ்ப்பாணம் யாழ்தேவி ரயில் சேவை இன்று முதல் புதன், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ரயில் யாழ்ப்பாணத்தில் இருந்து அடுத்து வரும் நாட்களில் (வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில்) கொழும்புக்குத் திரும்பும்

மறு அறிவித்தல்வரை வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இந்த ரயில் சேவை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நடைபெறமாட்டாது. (உ-எ)

## கடுகல மக்கள் வங்கியில் ரூபா 20 லட்சம் கொள்ளை!

### ஆயுதபாணிகள் கைவரிசை

கொழும்பு, பெப் 8

மாத்தறை மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக்கிளை ஒன்றில் இருந்து சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் ஆயுதம் தரித்த இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டன.

தங்காலைப் பொலிஸ் பகுதியில் உள்ள கடுகல எனும் இடத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளையினுள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கைக்குண்டுகள் பிஸ்டல்கள், ரைபிள்கள் சகிதம் 6 பேர் நுழைந்தனர்

ஊழியர்களைப் பயமுறுத்திய பின்னர் அவர்கள் அங்கிருந்த பணம் நகைகள் முதலியவற்றை அபகரித்துச் சென்றனர்.

கொள்ளையிடப்பட்ட பொருள்களின் பெறுமதி 20 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று மக்கள் வங்கியின் மாத்தறை பிராந்திய முகாமையாளர் மெரில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதே மாவட்டத்தில் உருபொக்கயில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் நேற்று 6 பேர் கொண்ட இனம் தெரியாத கோஷ்டி 4,919 ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றது

## நடிகர் காமினியை கொலை செய்ய முயற்சி!

கொழும்பு, பெப் 8

பிரபல சினிமா நடிகர் காமினி பொன்சேகா பயணம் செய்த ஜீப் வண்டி மீது இனந்தெரியாத நபர்கள் மறைந்து இருந்து தாக்குதல் நடத்தினர்.

கடந்த ஞாயிறு மாலை உருபொக்க, கொற்றவல என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காமினி பொன்சேகாவும் ஜீப்பில் இருந்த தெனியா முன்னாள் எம்பி கீர்த்திலதா அபயவிக்ரமாவும் காயம் இன்றித் தப்பினர்.

இருவரும் நாடாளுமன்றத் தேர்தலில் யு. என். பி வேட்பாளர்களாக மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். [உ-எ]

## பொலீஸ் ஜீப் மீது சூடு!

கொழும்பு, பெப். 8

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் ஜீப் மீது இனந்தெரியாதோர் மறைந்திருந்து சுட்டனர். இதில் 6 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தெனகம என்ற இடத்தில் இடம் பெற்றது.

4 கான்ஸ்டபிள்கள் வலஸ்முல்ல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

படுகாயமடைந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-எ)

### தமிழக சபாநாயகராக

## தமிழ்க்குடிமகன் ஏகமனதாகத் தெரிவு

சென்னை பெப் 8

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகராக திரு. தமிழ்க்குடிமகனும் உபசபாநாயகராக திரு. பி. துரைசாமியும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

இதற்கான நியமனப் பத்திரங்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன.

வேறு எந்த அரசியல் கட்சிகளும் இப்பதவிகளுக்குப் போட்டியிடவில்லை.

இன்று சட்டசபை, சபாநாயகர், உபசபாநாயகர் ஆகியோரை தெரிவு செய்யக் கூடுகிறது.

அப்போது தமிழ்க்குடிமகனும் பி. துரை

(8 ஆம் பக்கம் பார்க்க

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனை**

உபயோகித்த தளபாடங்கள், அலுமாரி, கண்ணாடி மேசை, Pram Cot, ஹோல்செற். Show-Case, Kenwood Chef, கடை அலுமாரி, அயன் Safe, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 126/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (நீர்வளசபை அருகில்) (9484)

தவக்காலத்துக்கு ஏற்ற சிலுவைப்பாதைப் புத்தகங்களும், திருமணித்தியாலம், பசாம், மோட்சபாதை, செபமாலைத்தியானம், கல்லறைச் செபம், பசாம் ஒலிபரப்பு நாடாக்களும் கிடைக்குமிடம்: புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோஸ் 140, கருவில் வீதி கரம்பொன், ஊர்காவற்றுறை. (9337)

**Uplands Farm**

சாம்பல் (புள்ளி) சேவல் குஞ்சு ஒவ்வொரு வாரமும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, சந்தையா லேன், கன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (9450)

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவல்குஞ்சு (8-2-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 4/50 முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, சந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) [9449]

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ செண்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C/1179]

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குப்குஞ்சுகள், விருந்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ செண்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C-1180)

**தவறிவிட்டது**

671080769V இலக்க முடைய ப. கேசவராஜனின் அடையாள அட்டை இணுவிலுக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும், (9339)

**தேவை**

வீடியோ சென்ரருக்கு பெண் உதவியாளர்கள் தேவை. உடன் வந்து சந்திக்கவும். கதிரை பின்னத் தெரிந்த பெண்களும் தேவை. நேரில் வரவும். குமாரி போட்டோ & வீடியோ பலாலிவீதி, தொண்டாவில். (9490)

**வீடு வாடகைக்கு**

நாவலர் வீதி. இல 317 இல் உள்ள வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு சில தளபாடங்களும் மோட்டார் சைக்கிளும் Yamaha 125 விற்பனைக்கு உண்டு தொடர்பு: N. சந்திரசேகரம், 317, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (9485)

**சேவை**

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை. யாழ்ப்பாணம் [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

கடிதங்கள், மனுக்கள் தயாரித்தல் ஆங்கிலத் தட்டச்சு, மொழிபெயர்ப்புகள் ஆகியன இளைப்பாறிய அரச உத்தியோகஸ்தரால் தினமும் (ஞாயிறு உட்பட) எந்நேரமும் திறம்படச் செய்து கொடுக்கப்படும். அமைதியான சூழல் தொடர்பு: 82, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [9321]

**NEW CITY TRADERS**

சகல விதமான சுவர் மணிக்கூடுகள், கைக் கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Film roll வகைகள், சூட்கேஸ், Travelling bags School bags, Wheel bags. எவர்சில்வர் பொருள்கள், Glass மற்றும் அன்பளிப்புப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள: New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/1536)

## வகுப்புகள்

**TOEFL**

புதியபிரிவு - ஆரம்பம் 11-02-89 சனி ஞாயிறு நாட்களில், நேரம் காலை 8-30 - 10-00 மணி வரை. S. B Iyar, No. 12, வைமன் வீதி, நல்லூர். [9473]

**ADVANCED ENGLISH**

புதிய பிரிவு ஆரம்பம்: 11-02-89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் காலை 6/30— 8/00 மணிவரை. S.B.Iyar No 12, வைமன் வீதி, நல்லூர். (9474)

**Spoken English**

தூர இடங்களிலிருந்து வருபவர்கள் வசதிக்காக புதிய பிரிவு ஆரம்பம்:- 11-02-89 சனி/ஞாயிறு நாட்களில் நேரம் காலை 10/30 - 12/30 S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [9475]

தனியார் "ரியூசன்" முறை:

# மாணவர்களை சுயசிந்தனை அற்றவர்களாக்குகிறது

பலாலி, பெப் 8

கல்வியின் முழுமையான இலக்குகளை தனியார் ரியூசன் முறை சின்னாபின்னமாக்கி விடுகின்றது. வெறுமனே தேர்வு ஒன்றை மட்டும் மனத்தில் இலக்காகக் கொண்டு இயந்திரமாக மாணவர்களைப் பயன்படுத்தி அவர்களைச் சுயசிந்தனையற்ற - தன்னம்பிக்கை அற்றவர்களாக இம்முறை மாற்றி விடுகின்றது

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஐந்து அதிபர்களுக்கான பாராட்டு விழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது யாழ். கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு: கே. சந்தசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இந்த வைபவம் இடம்பெற்றது.

கல்வி அதிகாரி திரு. பி. சண்முகராசாவின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பேசுகையில். அவர் மேலும் கூறியதாவது.

எமது பாடசாலைகள் இன்று வெறுமனே பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் "ரியூசன்" நிலையங்களாக மாறிவருகின்றன.

அங்கு மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய விளையாட்டுக்கள், கலைத்துவ வெளிப்பாடுகள் ஆகியவற்றுக்கு இடமளிக்க முடியாது போய் விட்டது

பாடசாலை நாட்களில் "ரியூசன்" நடத்துவதில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் ஆசிரியப் பற்றுக்குறையை காரணமாக வைத்து 'ரியூசன்' முறைக்கு நியாயம் கற்பிக்கும் தன்மையிலும் மாற்றம் கொண்டு வரவேண்டும்

ஆசிரியப் பற்றுக்குறைகளும் நீக்கப்படல் வேண்டும் - இப்படி அவர் கூறினார்.

(ச-119)

# வள்ளுவர் கிராமத்தில் புதிய கட்டடம்

கல்முனை, பெப். 8

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிரதேசமான மல்வத்தைப் பகுதியிலுள்ள புதிய குடியேற்றக் கிராமமான வள்ளுவர் கிராமத்தில் புனர் வாழ்வு நிதியத்தினால் அமைக்கப்பட்ட புதியகட்டடம் ஒன்றை அம்பாறை கஷ்தோலிக்க பங்குத்தந்தை வண. நிர்மல் மெண்டிஸ் அண்மையில் திறந்து வைத்தார்.

மல்வத்த பிரஜைகள் குழுத்தலைவரும், உழைப்பாளர் சங்கத் தலைவருமான திரு. வே. சின்னத்தம்பி வைபவத்தில் உரையாற்றுகையில்;- 'இக் கிராமம் ஒரு புதிய கிராமம். இதில் சுமார் 65 குடும்பங்கள் வாழ்கின்றன. இக் குடும்பங்கள் அனைத்தும் அகதிகளேயாவர் இவர்களுக்கு அரசின் மூலம் எந்த விதமான உதவிகளும் இது வரை கிடைக்கவில்லை. இப்படியான மக்களுக்கு வாழ்வளிக்க இது போன்ற அமைப்புக்கள் முன்வருவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறோம்

இந்தக் கட்டடம். பாலர் பாடசாலை, மாதிரிக்கடை, காரியாலயம் என்னும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இக் கிராம மக்கள் பலன் பெறுவார்கள் என நான் நம்புகிறேன்'. என்று கூறினார்.

வைபவத்தில் அம்பாறை மாவட்ட புனர்வாழ்வு நிதியப் பொறுப்பாளர் திரு என். ராகவன், திரு. வே. தங்கத்துரை ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(இ-84)

## பரீட்சை முடிவு

வெளிவாரிப் பட்டதாரிப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டன.

சென்ற ஏப்பிரல் மாதம் நடைபெற்ற வெளிவாரிப்பட்டதாரிப் பரீட்சைகளில் தோற்றிய பரீட்சார்த்திகளுக்குரிய பெறுபேறுகள் தபால்மூலம் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச - 113)

# நிவாரணம் பெறுவோர் அதனை

## உரியமுறையில் பயன்படுத்த வேண்டும்

### நெதர்லாந்துப் பிரதிநிதி உரை

பச்சிலைப்பள்ளி, பெப் 8

வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு நிவாரணம் வழங்குவதிலும் பார்க்க அவர்களது பொருளாதாரத்தை விருத்தி செய்வதே மேலானது. உதாரணத்திற்கு பசியுடன் வரும் ஒருவனுக்கு மீன்கொடுப்பதிலும் பார்க்க மீன் பிடிக்கும் தூண்டில், கயிறு போன்றவற்றைக் கொடுப்பது நல்லம். நிறுவனங்கள் வழங்கும் நிவாரணங்கள், கடன்கள் ஆகியவற்றைப் பெறுபவர்கள் உரிய தேவைகளுக்குப் பயன்படுத்தி தாங்களும் நாடும் முன்னேற உழைக்க வேண்டும்.

இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நெதர்லாந்து பிரதிநிதி ஜான் புருஸ்ஸிமா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி. கனகசபை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சிக்கன கடன் வழங்கு சங்க சம்மேளன வடக்கு கிழக்கு மாகாண திட்டப் பணிப்பாளர் எஸ். இராஜரத்தினம், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சி க. வ, கூ. சங்க சம்மேளன மலையக திட்டப் பணிப்பாளர் செல்வி. க ரஜனி. பளைப் பிராந்திய கிராம அபிவிருத்தி அலுவலர் மு. அழகேந்திரன் மக்கள் சனசமூக நிலைய தலைவர் பா. ஜோர்ஜ் உட்பட பலர் உரையாற்றினர்.

(க-117)

உடுவில் மல்வம் பகுதியில்:

# இரு வீடுகளிலும் கடைகளிலும் கொள்ளை!

மானிப்பாய், பெப் 8

உடுவில் மல்வம் பகுதியில் பரவலாக களவு, கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இப்பகுதியைச்சேர்ந்த இரு பிராமணர் வீடுகளில் கொள்ளையர் புகுந்து நகைகள் பணம் முதலியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் இப் பகுதிகளில் உள்ள இருகடைகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பல பொருள்கள் களவாடப் பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் பற்றித் தெரியவருவதாவது

உடுவில் குமரகோட்டம் முருகமூர்த்தி கோவிலுக்கு அருகில் உள்ள அர்ச்சகர் பிரம்ம ஸ்ரீ கா. குகானந்த சர்மாவின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர் அர்ச்சகரையும் மனைவி பிள்ளைகளையும் வீட்டுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த காரினுள் இருக்குமபடி பணித்துவிட்டு வீட்டிலுள்ள பெருமளவு சங்கிலியும்500 ரூபாவையும் கொள்ளையடித்ததோடு. அர்ச்சகரின் மனைவியின் காதுத்தோடு சங்கிலி மூக்கு மின்னி ஆகியவை களையும் கழற்றி தம்முடன் எடுத்துச் சென்றனர்.

கொள்ளையர்கள் மூவர் தமது வாயைக் கறுப்புத்துணியால்கட்டி கொண்டு வாள், பொல்லுகள் சகிதம் வந்து கொள்ளையிட்டதாக அர்ச்சகர் தெரிவித்தார்

அதே இரவு மல்வம் ஞானவைரவர் கோவிலுக்கு அருகில் பிரம்மஸ்ரீ மு. நவநீத ஐயரின் வீட்டிலும் இதே போன்று வாயைக் கட்டி வாள், பொல்லுகளுடன் உள்புகுந்த கொள்ளையர்கள் மூவர் அவரின் மனைவி பிள்ளைகளின் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றனர்.

மனைவியின் தாலியைக் கூட கொள்ளையர்கள் விட்டு வைக்கவில்லை.

இச் சம்பவத்தில் சுமார் 20 000 ரூபா பெறுமதி வாய்ந்த நகைகள் கொள்ளையிடப் பட்டன.

மல்வம் பகுதியில் உள்ள இரண்டு கடைகள் சம்பவதினம் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப் பட்டன. (ச - 90)

### சரியான பெயர்

யாழ்ப்பாணம், பெப் 8

இம்மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இடம் பெற்ற சூட்டுச் சம்பவத்தின்போது உயிரிழந்த இரண்டு மாணவர்களில் ஒருவர் சின்னத்தம்பி ஜெகநாதன் ஆவார்.

முதலாம் வருட, பௌதிக விஞ்ஞான பீட மாணவரான இவரது பெயர் சதாசிவம் ஜெகநாதன் என்று செய்திகளிலும், கண்ணீர் அஞ்சலிகளிலும் வெளிவந்தது சரியல்ல என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

## வீடுகட்ட போரூட் உதவி

வடமராட்சி, பெப் 8

இன்பருட்டியில் கடந்த வருடங்களில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்ட மக்களின் வீடுகளை போரூட்ஸ்தாபனம் புனரமைத்தும் புதிதாக அமைத்தும் வருகிறது.

இவ் வேலைகளுக்காக போரூட் ஸ்தாபனம் ரூபா 50,000 ஒதுக்கீடு செய்துள்ளது.

இக் கட்டட வேலைகள் யாவையும் இன்பருட்டி ஐக்கிய நாணய சங்கம் முன்னின்று நடத்தி வருகின்றது. (ச-160)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| நாடு | :-புறூனை (BRUNEI) |
| வேலை | :-தராதர உதவியாளர்கள் (கூலி) |
| சம்பளம் | :- 500 சிங்கப்பூர் டாலர் (9 500/=) |
| ஒப்பந்தகாலம் | :- மூன்று வருடம் |

**உணவு, வதிவிடம் இலவசம்**

3 வருட காப்புறுதியுடன் சென்று, நாம் இழந்த செல்வங்களை மீண்டும் ஒன்று சேர்ப்போம். எந்தக் காரணங்களை முன்னிட்டும் கொழும்பு செல்லத் தேவையும் இல்லை. பணவிரயமும் இல்லை காலம் வீணுவதும் இல்லை விரும்பியவர்கள் என்னைச் சந்திக்கவும்.

முக்கியமாக உங்களிடம் இருக்க வேண்டியவைகள்
- 1 சர்வதேச கடவுச் சீட்டு
- 7 மார்பு அளவான புகைப்படம்
- 1 முழு அளவான கலர்ப்படம்
- 1 வைத்திய அத்தாட்சி

அனைத்திற்கும் 10 ஆம் திகதிக்கு முன் சந்திக்கவும்

தாய்வான் நாட்டுக்கு பதிந்தவர்களும் உடன்சந்திக்கவும்

# அ. மகேந்திரன்

யாழ். முகவரி:
155(5), குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கொழும்பு முகவரி.
112, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு—13

[9362]

உ

விராட் விஸ்வப் பிரம்மனே நம

# ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ வருஷம் தை மாதம் 28 ஆம் நாள் (10-02-1989) வெள்ளிக்கிழமை காலை 8. 35 மணி முதல் 10 மணி வரையுமுள்ள சுப வேளையில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் ★ ஜெயரட்ணம் ★ அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி ★ சந்திரவதனு ★ அவர்களுக்கும் |
|---|---|

திருவருள் துணை கொண்டு வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்யம் தரித்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் கலந்து கொண்டு மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்; 11-2-1989 சனிக்கிழமை
மாலை 3 மணி முதல் 5 மணி வரை மணமகனில்லத்தில் நடைபெறும்.
இங்ஙனம் தங்கள் நல் வரவை விரும்பும்

| திருமதி சின்னத்துரை அன்னலட்சுமி துரை இல்லம், 15/1, சேர் பொன் இராமநாதன் வீதி. யாழ்ப்பாணம். | திரு. திருமதி இராசதுரை (றேடியோ மெக்கானிக்) 110, பத்திரகாளி கோவிலடி. வண் வடமேற்கு, யாழ்ப்பாணம். |
|---|---|

இரு வீட்டார் அழைப்பு
(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)
அவ்வண்ணமே விரும்பும்

சி. நவரட்ணம் தம்பதிகள்
சி. குமாரசாமி தம்பதிகள்
சி. குணரட்ணம் தம்பதிகள்
} சகோதரர்கள்

(9495)

★



உ





சிவமயம்

ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி துணை

# ★ விவாஹ சுப முஹூர்த்தப் பத்திரிகை ★

அனேக நமஸ்காரம் / ஆசிர்வாதம்

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் விபவ ஞு தை மீ 28 ஆம் நாள் (10 - 02 - 89) வெள்ளிக்கிழமை பூர்வ பஞ்சமி திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8 34 தொடக்கம் 10.15 மணிவரையுள்ள மீன லக்கின சுப முஹூர்த்தத்தில் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமியினதும். நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகப பெருமானினதும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
★ ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளினதும் ஆசியுடன் ★

| நகுலேஸ்வர தேவஸ்தானம் ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ குமார ஸ்வாமிக் குருக்கள் சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் சிரேஷ்ட குமாரன் சிரஞ்சீவி **பிரம்மஸ்ரீ குமாரஸ்வாமி சர்மா** | நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் கோயில் ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ பிக்ஷாடனக் குருக்கள் சந்திரசேகரக் குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புத்திரி சௌபாக்யவதி **ரஞ்சனி** என்கிற **தாக்ஷாயணியை** |
|---|---|


கன்னிகாதானம்; பாணிக்கிரஹணம்; திருமாங்கல்யதாரணம் செய்து கொடுப்பதாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முஹூர்த்தம் நீர்வேலி விநாயகர் சந்நிதியில் (வாய்க்காற்றரவை) நடைபெறுவதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வந்து முஹூர்த்தத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மணமகள் இல்லம்: வரவேற்புபசாரம் 11 - 02 - 89 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல்
மணமகன் இல்லம்: வதுவரக் கிரஹப்பிரவேசமும் - வரவேற்புபசாரமும் 12 - 02 - 89 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல்

இங்ஙனம்
சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்
தம்பதிகள்
தேவஸ்தானம் (கீரிமலை)

(9492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Specialists in: WATCH REPAIRING
Dealers in: WATCHES & CLOCKS
all kinds of watch & clocks BATTERIES are available
DILKO WATCH WORKS
404½ HOSPITAL Rd. JAFFNA (OPPOSITE BUS STAND)


சுற்று நிருபம் வந்தது:

# இறந்த கூட்டுறவு ஊழியர் குடும்பத்துக்கு ரூ. 1 லட்சம் நஷ்டஈடு

ஒட்டுசுட்டான், பெப். 8

கடந்தகாலவன் செயல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக உயிரிழந்த கூட்டுறவு ஊழியர்களுக்கும் பணிப்பாளர்களுக்கும் நஷ்ட ஈடாக தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான 11-1-89 திகதியிடப்பட்ட சுற்று நிருபம் வெளிவந்துள்ளது.

நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவுகளை அந்தந்த சங்கங்களே கொடுக்க வேண்டுமென்றும் நிதி பற்றாக்குறைவான சங்கங்களுக்கு கூட்டுறவுத் திணைக்களம் அக்கொடுப்பனவுகளை வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு ஆணையாளர் திரு. டபிள்யூ பீ. எஸ். ஜெயரத்தின சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

(ச-113)


**Wanted - A Teacher**

Qualified in Western Music & English, to train children in Elocution, Action Songs etc.

Applications to Reach :
Education Officer,
M.P.C.S., Tellippalai.

Before 15th February (C/1168)



முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



★ அ. டினேஷன் ★

கொக்குவில் பூநாறி ஒழுங்கையில் வசிக்கும் அருள்வதனன் - சுகந்தினி தம்பதியரின் செல்வப்புதல்வன் டினேஷன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, நைஜீரியா அப்பப்பா அப்பம்மா, மானிப்பாய் தாத்தா, அம்மம்மா, சாந்தா பெரியம்மா, கோண்டாவில் பெரியப்பா, பெரியம்மா, சோபன் அண்ணா மட்டுநகர் மாமா, மாமி, மையூரன், சதன் மச்சானும், ஜேர்மனி பெரியப்பா, பெரியம்மா, பிரசாத், சுரோசன் அண்ணாவும் சவூதி பெரியப்பா பெரியம்மா, ரோஷானி; ஜேர்மனி பெரியப்பா, பெரியம்மா மற்றும் பூட்டி, தாத்தாமார், அம்மம்மாமார், மாமாமார், அன்ரிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் இவரை பல்கலையும் கற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

(9483)



ஓம் சக்தி

ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் பிரதிஷ்டா

# கும்பாபிஷேகம்

10 - 02 - 1989

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் உள்பிரகாரத்தில் புதிதாய் நிர்மாணிக்கப் பெற்ற ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 10-02-1989 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 10.00 மணிக்குள்வரும் மீனலக்கின சுப ஹோரையில் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் கிரியைகளில் கலந்து அம்பாளின் அநுக்கிரகத்தைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

வெளியூர்களில் இருந்துவரும் அடியார்களுக்கு காலை 9.00 மணிக்கு குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து பிரயாணத்தைத் தொடர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆ. தியாகராசா
கௌரவ செயலாளர்

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.
06 - 02 - 1989.

(C/1451)



# FORTUNA ENTERPRISES

[Labour Licence No 79]

Immediate Vacancies in Kuwait
உடனடி வேலை வாய்ப்புக்கள்

(1) Airport and Hospital Cleaners-250
விமான நிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
சம்பளம்: 30 KD
(மேலதிக நேரவேலை திட்டப்படுத்தப்பட்டுள்ளது)
அத்துடன் இருப்பிட வசதி
20-02-89க்கு முன் 7 போட்டோக்களுடனும் பாஸ்போட்டுடனும் விண்ணப்பித்தால் 30-03 89க்கு முன் பிரயாணமாகலாம்.

(2) Heavy Vehicle Drivers -50
கனரக வாகன சாரதிகள்
சம்பளம்: 60 KD

(3) Light Vehicle Drivers 50
சாதாரண வாகன சாரதிகள்
சம்பளம்: 45 KD

நாடவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி

இ. விஸ்வேஸ்வராயன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

[C-1436]


பேராசிரியர் வித்திக்கு

# உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 8

"1974 ஆம் ஆண்டில் நடந்தேறிய அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது உருவான உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை அமைப்பதற்குப் பல்நாட்டுப் பேரறிஞர்களுடன் அரும்பாடுபட்டுப் பணியாற்றி முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் பேராசிரியர் அமரர் சு. வித்தியானந்தன் அவர்களும் ஒருவராவார்.

பேரறிஞர் காலஞ்சென்ற மாமேதை திரு. தனிநாயகம் அடிகளார் சென்ற வழியில் உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று தமிழர் வாழ்விடங்களைக் கண்டறிந்து அவர்களின் குடிப்பரம்பல், வாழ்வியல் போன்ற விடயங்களை ஆராய்ந்து தமிழுலகத்துக்கும் அகிலத்துக்கும் வெளியிட்ட பெருமைக்குரியவர் திரு. சு. வித்தியானந்தன் அவர்கள்.

அன்னாரின் மறைவை இட்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது."

## விடுதலையான இளைஞர் அமைப்பு

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு கிராமத்தில், தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையான இளைஞர்கள் ஒருங்கிணைந்து "தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையானவர்களுக்கான சிறுகைத்தொழில் சங்கம்" எனும் பெயரில் அமைப்பு ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையான 55 இளைஞர்கள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர் என்று சங்கச் செயலாளர் திரு. வே. கருணை இரத்தினம் அறிவித்துள்ளார்.

(க - 14)

## றெட்பானா அன்பளிப்பு

முல்லைத்தீவு, பெப் 8

முள்ளியவளையில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் முல்லைத்தீவு றெட்பானா ஸ்தாபனம் 4,500 அப்பியாசப் புத்தகங்களை இலவசமாக வழங்கியது.

இதேபோல் இம்மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் தாம் அப்பியாசப் புத்தகங்களை வழங்க இருப்பதாக றெட்பானா ஸ்தாபனத்தின் பிரதிநிதி செல்வி நந்தினி சிதம்பரப்பிள்ளை கூறினார்.

(க-92)

## பல் வைத்திய சேவைகள் மீளாய்வு கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 8

பாடசாலைகளில் இயங்கும் பற்சிகிச்சை நிலைய, பற்சிகிச்சையாளரின் கூட்டம் இன்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ் மாவட்ட பல் வைத்திய அதிகாரி டாக்டர் கிருஷ்ணராசா தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் யாழ்-மாவட்ட பாடசாலைகளின் பற்சிகிச்சையாளர்கள் கலந்து கொள்வார்கள்.

பாடசாலை மாணவர்களின் பல்வைத்திய சேவைகளின் முன்னேற்றம்பற்றி கூட்டத்தில் ஆராயப்படும்.

மேலும் பாடசாலை மாணவர்களிடையே இச்சேவையை நடத்துவது பற்றியும் பல் பாதுகாப்புப் பற்றி மாணவர்களுக்கு சுகாதாரக்கல்வி [illegible] செயல்திட்டங்கள் உருவாக்கப்படும்.

[illegible]


+
J.M.J.

எஸ். பீ. அன்ரன் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

# குவைத் நாட்டுக்கு

கிளீனேர்ஸ் ஆட்கள் தேவை
சம்பளம் 35 டினர்.
உணவு, இருப்பிடம் இலவசம்.
ஆஸ்பத்திரி, விமான நிலையம்
போன்ற இடங்களுக்கு வேலைவாய்ப்பு
உடன் செய்து கொடுக்கப்படும்.

# ஜேர்மனிக்கு

16 வயதுக்குட்பட்டவர்களுக்கு
உடன் செய்து தரப்படும்.

S. P. ANTON
648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1168)



An associate of The Maharaja Organisation Limited 1939-1989 50 YEARS The courage to be different.

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe




SLS

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
... PLACE, COLOMBO - 2. T'PHONE: 596306 — 93716 - 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 1989

1989 - 02 - 15 ஆம் திகதி நடைபெற இருக்கும் தேர்தலின் பொழுது வாக்காளர்கள் வசதி கருதி கீழ்வரும் விவரங்களைத் தருகிறோம். இவற்றைக் கவனித்து அதன்படி உங்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்லவும்.

1982 ஆம் ஆண்டு தேர்தலின்பொழுது நீங்கள் வாக்களித்த நிலையத்தின் பெயர் அட்டவணை 1 இலும் தற்போதைய பொதுத் தேர்தலின்பொழுது நீங்கள் செல்லவேண்டிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் அட்டவணை 2 இலும் தரப்பட்டுள்ளது அட்டவணை 1 இல் நீங்கள் முன்பு வாக்களித்த நிலையத்திற்கு எதிராகத் தற்பொழுது நீங்கள் செல்ல வேண்டிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளது. இதைக் கவனித்து உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புதிய வாக்கெடுப்பு நிலையத்துக் குச் சென்று வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நடைமுறை வாக்காளர் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள யாவரும் இத்தேர்தலில் வாக்களிக்கலாம் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

ஆர். கே. சந்திரானந்த த சில்வா,
தேர்தல் ஆணையாளர்.

# வாக்கெடுப்பு நிலையங்கள்

## தேர்தல் மாவட்டம் இல. 10 - யாழ்ப்பாணம்

அட்டவணை — 1 1982 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தேர்தலில் வாக்களிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் இலக்கமும் இடமும் பற்றிய விவரங்கள்:

அட்டவணை — 2 : 1989ஆம் ஆண்டு, பெப்ரவரி 15 ஆம் திகதி நிகழவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தாபிக்கப்பட்ட புதிய வாக்கெடுப்பு நிலையங்களின் இலக்கமும், இடமும் பற்றிய விவரங்கள்:

### வாக்கெடுப்பு பிரிவு "அ" ஊர்காவற்றுறை

| அட்டவணை 1 | அட்டவணை 2 |
|---|---|
| 1. யா நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித் | யா / நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித் |
| 2. யா அ.வி.சபை உப-அலுவலகம் நெடுந்தீவு | யா / நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித் |
| 3. யா நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணியம் வித் | யா / நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித் |
| 4. யா நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம் | யா / நயினாதீவு மகா வித்தியாலயம் |
| 5. யா நயினாதீவு மகாவித்தியாலயம் | யா / நயினாதீவு மகா வித்தியாலயம் |
| 6. யா நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம் | யா / நயினாதீவு மகா வித்தியாலயம் |
| 7. யா புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியாலயம் | யா / புங்குடுதீவு மகா வித்தியாலயம் |
| 8. யா புங்குடுதீவு மேற்கு றோ க. த. க பாடசாலை | யா / புங்குடுதீவு மகா வித்தியாலயம் |
| 9. யா புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி வித்தியாலயம் | யா / புங்குடுதீவு மகா வித்தியாலயம் |
| 10. யா புங்குடுதீவு இறுப்பிட்டிஅ மி. த. க. பாட | யா / புங்குடுதீவு மேற்கு றோ. க. த. க. பாடசாலை |
| 11. யா புங்குடுதீவு இறுப்பிட்டி சித்திவிநாயகர் ம.வி | யா / புங்குடுதீவு மேற்கு றோ. க. த. க. பாடசாலை |
| 12. யா புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் | யா / புங்குடுதீவு இறுப்பிட்டி சித்திவிநாயகர் ம. வி. |
| 13. யா புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | யா / புங்குடுதீவு இறுப்பிட்டி சித்திவிநாயகர் ம. வி. |
| 14. யா புங்குடுதீவு ராஜராஜேஸ்வரி வித்தியாலயம் | யா / புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் |
| 15. புங்குடுதீவு கிழக்கு மத்தி கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் | யா / புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் |
| 16. யா புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் | யா / புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் |
| 17. யா சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம் | யா / வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் |
| 18. யா வேலணை ஆத்திசூடி வித்தியாலயம் | யா / வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 19. யா வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் | யா / வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 20. யா வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | யா / வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 21. கலைமகள் சனசமூக நிலையம் வேலணை கிழக்கு | யா / வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 22. வேலணை மேற்கு நடராசா அரசினர் த.க. பாட | யா / வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் |
| 23. யா வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் | யா / வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் |
| 24. யா அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | யா / அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் |
| 25. யா மண்கும்பான் அரசினர் த க: பாடசாலை | யா / அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் |
| 26. யா மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம் | யா / மண்டைதீவு மகா வித்தியாலயம் |
| 27. யா மண்டைதீவு மகாவித்தியாலயம் | யா / மண்டைதீவு மகா வித்தியாலயம் |
| 28. யா அனலைதீவு தெற்கு அரசினர் த க பாடசாலை | யா / அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் |
| 29. யா அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ் வித் | யா / அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் |
| 30. யா அ வி சபை உப-அலுவலகம் எழுவைதீவு | யா / அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் |
| 31. யா ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. தமிழ் மகளிர் பாடசாலை | யா / ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை |
| 32: தீவுப்பகுதி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஊர்காவற்றுறை | யா / ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை |
| 33. யா கரம்பன் சண்முகானந்தா ம: வித்தியாலயம் | யா / கரம்பன் சண்முகானந்த மகா வித்தியாலயம் |
| 34. யா கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித் | யா / கரம்பன் சண்முகானந்த மகா வித்தியாலயம் |
| 35. யா தம்பாட்டி அரசினர் த.வி ஊர்காவற்றுறை | யா / நாரந்தனை றோ. க. மகா வித்தியாலயம் |
| 36. யா நாரந்தனை றோ க த க பா ஊர்காவற்றுறை | யா / நாரந்தனை றோ. க. மகா வித்தியாலயம் |
| 37. புளியங்கூடல் நெசவு நிலையம் | யா / ஊர்காவற்றுறை சுருவில் றோ. க. த. வித் |
| 38. சுருவில் கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய மண்டபம் | யா / ஊர்காவற்றுறை சுருவில் றோ. க. த. வித் |

### வாக்கெடுப்பு பிரிவு "ஆ" வட்டுக்கோட்டை

| அட்டவணை 1 | அட்டவணை 2 |
|---|---|
| 1. யா வியாவில் சைவ தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 2. யா வேரப்பிட்டி ஸ்ரீ கணேசவித்தியாலயம் | யா/ யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 3. யா யாழ்ரன் கல்லூரி காரைநகர் | யா/ யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 4. யா காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித் | யா/ யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 5. யா காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் | யா/ யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 6. நீலிப்பந்தனை நெசவு நிலையம் காரைநகர் | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 7. யா காரைநகர் இலகடி சைவ த க. பாடசாலை | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 8. யா காரைநகர் இந்துக் கல்லூரி | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 9. யா காரைநகர் இந்துக் கல்லூரி, நடராசா மண்டபம் | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 10. யா காரைநகர் கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 11. யா பாலாவோடை இந்து த. க. பாடசாலை | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 12. யா தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயம் காரைநகர் | யா/ காரைநகர் இந்துக்கல்லூரி |
| 13. கிராம முன்னேற்றச்சங்க மண்டபம் அராலி தெற்கும் கிழக்கும் | யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் |
| 14. யா அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் | யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் |
| 15. யா அராலி முருகமூர்த்தி வித்தியாலயம் | யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் |
| 16: யா அராலி வள்ளியம்மை ஞானபாத்த வித் | யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் |
| 17. யா அராலி இந்துக் கல்லூரி | யா/ வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி |
| 18. யா வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆரம்பப் பிரிவு | யா/ வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி |
| 19. யா சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம் | யா/ வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி |
| 20. யா வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி | யா/ வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி |
| 21. யா பிளாவத்தை அமெரிக்கன் மிசன் த. க. பா. | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி |
| 22. யா யாழ்ப்பாணக் கல்லூரி | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி |
| 23. யா வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி |
| 24. யா வட்டுக்கோட்டை மேற்கு சுப்பிரமணிய வித் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி |
| 25. யா சங்கானை ஸ்தான அமெரிக்கன் மிசன் த.க.பா | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 26. சங்கானை பெண்கள் கிராம முன்னேற்றச் சங்க நெசவு நிலையம் | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 27. யா சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் (ஆண் வாக்காளர்கள்) | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் (ஆண் வாக்காளர்) |
| யா சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் (பெண் வாக்காளர்கள்) | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் (பெண் வாக்காளர்) |
| 28. யா பிராம்பத்தை அமெரிக்கன் மிசன் த: க: பா | யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி |
| 29. யா பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி |
| 30. யா பண்டத்தரிப்பு யசிந்தா றோ. க. த. க. பா | யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி |
| 31. யா சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித் | யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி |
| 32. யா சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம் | யா/ சில்லாலை றோ. க. த. க. பாடசாலை |
| 33. யா சில்லாலை றோ. க. த: க. பாடசாலை | யா/ சில்லாலை றோ. க. த. க. பாடசாலை |
| 34. ஆண்கள் கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் பண்ணாகம் தெற்கு | யா/ சித்தங்கேணி கணேச வித்தியாலயம் |
| 35. யா சித்தங்கேணி கணேச வித்தியாலயம் | யா/ சித்தங்கேணி கணேச வித்தியாலயம் |
| 36. யா பண்ணாம்வடக்கு அமெரிக்கன்மிசன் த க.பா | யா/ சித்தங்கேணி கணேச வித்தியாலயம் |
| 37. யா விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் | சா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் |
| 38. யா திருவடிநிலை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை | யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் |
| 39. யா சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம் | யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் |
| 40. யா சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் | யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் |
| 41. யா மூளாய் அமெரிக்கன்மிசன் த: க. பாடசாலை | யா/ மூளாய் அமெரிக்கன் மிசன் த. க. பாடசாலை |
| 42. யா பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித் | யா/ மூளாய் அமெரிக்கன் மிசன் த. க: பாடசாலை |
| 43. யா தொல்புரம் அமெரிக்கன் மிசன் த. க. பா | யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் |
| 44. யா தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம் | யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் |

### வாக்கெடுப்பு பிரிவு 'இ' காங்கேசன்துறை

| அட்டவணை 1 | அட்டவணை 2 |
|---|---|
| 1. யா மாதகல் சென்.தோமஸ் றோ. க. த. க.பாட | யா/ மாதகல் புனித தோமஸ் றோ. க. த. ம. பாட. |
| 2. யா மாதகல் விக்கினேஸ்வர வித்தியாலயம் | யா/ மாதகல் புனித தோமஸ் றோ. க. த. ம. பாட. |
| 3. யா மாதகல் மேற்கு அரசினர் த. க பாடசாலை | யா/ மாதகல் புனித தோமஸ் றோ. க. த. ம. பாட. |
| 4. யா பெரியவிளான் றோ க த க பாட(ஆண் வாக்) | யா/ பெரியவிளான் றோ. க. த. க. பாடசாலை) (ஆண் வாக்காளர்) |
| யா பெரியவிளான் றோ க த க பாட(பெண் வாக்) | யா/ பெரியவிளான் றோ. க. த. க. பாடசாலை (பெண் வாக்காளர் |
| 5. யா சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் | யா/ பெரியவிளான் றோ. க. த. க. பாடசாலை |
| 6. யா இளவாலை றோ க த ஆண்கள் பாடசாலை | யா/ இளவாலை றோ. க. த. ஆண்கள் பாடசாலை |
| 7. யா மாரீசன் கூடல் சுப்பிரமணியம் வித் | யா/ இளவாலை றோ. க. த. ஆண்கள் பாடசாலை |
| 8. யா அளவெட்டி அருணாசலம் வித்தியாலய | யா/ அருணோதயா கல்லூரி அளவெட்டி |
| 9. யா அருணோதயாக் கல்லூரி அளவெட்டி | யா/ அருணோதயா கல்லூரி அளவெட்டி |
| 10. யா அளவெட்டி சதானந்தா வித்தியாலயம் | யா/ அருணோதயா கல்லூரி அளவெட்டி |
| 11. யா அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித் | யா/ அருணோதயா கல்லூரி அளவெட்டி |
| 12. அழகொல்லை பிள்ளையார் கோயில் மடம் | யா/ அருணோதயா கல்லூரி அளவெட்டி |
| 13. மகாஜன சபை மண்டபம் அளவெட்டி வடக்கு | யா/ அருணோதயா கல்லூரி அளவெட்டி |
| 14. யா மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் | யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் |
| 15. யா மல்லாகம் மகாவித்தியாலயம் | யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் |
| 16. யா மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் | யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் |
| 17. யா இளவாலை மெய்கண்டான் மகாவித் | யா/ இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரி |
| 18. யா இளவாலை மெய்கண்டான் மகாவித் | யா/ இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரி |
| 19. யா கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 20. யா பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 21. யா தெல்லிப்பளை சைவப்பிரகாசவித்தியாலயம் | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 22. யா கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 23. யா குளமன்கால் றோ க த க பாடசாலை | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 24. யா மகாஜன கல்லூரி தெல்லிப்பளை | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 25. யா யூனியன் கல்லூரி தெல்லிப்பளை | யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பளை |
| 26. மாவை கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் | யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம் |
| 27. யா கொல்லன் கலட்டி இந்து த. க. பாட | யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம் |
| 28. யா வீமன் காமம் மகாவித்தியாலயம் | யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம் |
| 29. யா நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் | யா/ நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை |
| 30. யா காங்கேசன்துறை சிங்கள கனிஷ்ட வித் | யா/ நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை |
| 31. யா நடேஸ்வரா கல்லூரி காங்கேசன்துறை | யா/ நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை |
| 32. யா தையிட்டி சிவகுருநாத வித்தியாலயம் | பழைய தையிட்டி கூட்டுறவு பண்டகசாலைக் கட்டடம் |
| 33. யா தையிட்டி கணேசவித்தியாலயம் | பழைய தையிட்டி கூ பண்டகசாலைக் கட்டடம் |
| 34. புதிய நெசவு நிலையம் மயிலிட்டிக்கரை | பழைய தையிட்டி கூ பண்டகசாலைக் கட்டடம் |
| 35. யா மயிலிட்டி றோ க த க பாடசாலை | யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 36. யா குரும்பசிட்டி பொன் பரமானந்தர் ம வித் | யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 37. யா குரும்பசிட்டி பொன் பரமானந்தர் ம வித் | யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 38. யா மயிலிட்டி தெற்கு ஞானோதய வித் | யா/ மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம் |
| 39. யா அ. வி. சபை உப-அலுவலகம் மயிலிட்டி | யா/ மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம் |
| 40. யா பலாலி சித்திவிநாயகர் வித் (ஆண் வாக்) | |
| யா பலாலி சித்திவிநாயகர் வித் (பெண் வாக்) | மயிலிட்டி இறங்குதுறைக் கட்டடம் பலாலி |
| 41. யா பலாலி வடக்கு அரசினர் த.க. பாடசாலை | மயிலிட்டி இறங்குதுறைக் கட்டடம் பலாலி |
| 42. யா வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித் | யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் |
| 43. வீமன்காமன் இளைஞர் சங்க மண்டபம் | யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் |
| 44. வீமன்காமம் இளைஞர் சங்க மண்டபம் | யா/ புன்னாலைக்கட்டுவன் சைவ வித்தியாலயம் |
| 45. யா ஏழாலை அமெரிக்கன்மிசன் த க. பாடசாலை | யா/ புன்னாலைக்கட்டுவன் சைவ வித்தியாலயம் |

### வாக்கெடுப்பு பிரிவு 'ஈ' மானிப்பாய்

| அட்டவணை 1 | அட்டவணை 2 |
|---|---|
| 1. சுதுமலை மத்தியசனசமூக நிலையமும் வாசிகசாலையும் | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 2. யா சுதுமலை சின்மைய பாரதி வித்தியாலயம் | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 3. யா மானிப்பாய் புனித ஆன் றோ க த க பா | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 4. யா ஆனைக்கோட்டை றோ. க: த, க. பா உயரப்புலம் | யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை கூளாவடி |
| 5. யா ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை கூளாவடி | யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை கூளாவடி |
| 6. யா ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித் | யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை கூளாவடி |
| 7: மகாஜன சனசமூக நிலையம், மூத்தவிநாயகர் கோவிலடி ஆனைக்கோட்டை | யா / நவாலி மகா வித்தியாலயம் |
| 8. யா நவாலி அட்டகிரி வித்தியாலயம் | யா / நவாலி மகா வித்தியாலயம் |
| 9. யா நவாலி ஸ்தான அமெரிக்கன்மிசன் த. க. பா | யா / நவாலி மகா வித்தியாலயம் |
| 10. யா நவாலி மகா வித்தியாலயம் | யா / நவாலி மகா வித்தியாலயம் |
| 11. யா நவாலி புனித பீற்றர்ஸ் றோ. க. த. க. பா | யா / நவாலி மகா வித்தியாலயம் |
| 12. யா சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை | யா / சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை |
| 13. யா சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் (பிரதான பாடசாலை) | யா / சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் |
| 14. யா சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் (முன்னைய அமெரிக்கன்மிசன் த. க; பாடசாலை) | யா / சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய்.... (4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 15. மாகியப்பிட்டிச் சந்தை | யா / சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை |
| 16. யா சுட்டுடை சைவ வித்தியாலயம் | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 17. யா மானிப்பாய் ஞாபகார்த்தஆங்கிலபாடசாலை | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 18. யா மானிப்பாய் இந்துக் கல்லூரி | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 19. யா திருஞானசம்பந்த வித்தியாலயம் சுன்னாகம் | புகையிரத நிலையம் சுன்னாகம் |
| 20. யா சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயம் | யா / இராமநாதன் கல்லூரி சுன்னாகம் |
| 21. யா சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயம் | புகையிரத நிலையம் சுன்னாகம் |
| 22. யா சுன்னாகம் றோமன் கத்தோலிக்க த. க. பா | யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம் |
| 23. யா சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் | யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம் |
| 24. யா ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம் | யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம் |
| 25: கமநல சேவை நிலையம் உடுவில் | யா / உடுவில் மகளிர் கல்லூரி |
| 26. யா உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை | யா / உடுவில் மகளிர் கல்லூரி |
| 27. யா உடுவில் மகளிர் கல்லூரி | யா / உடுவில் மகளிர் கல்லூரி |
| 28. யா உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் | யா / இராமநாதன் கல்லூரி சுன்னாகம் |
| 29. யா உடுவில் மல்வத்தை றோ. க. த. க: பா | யா / இராமநாதன் கல்லூரி சுன்னாகம் |
| 30. யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உப அலுவலகம் உடுவில் | யா / இராமநாதன் கல்லூரி சுன்னாகம் |
| 31. யா சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலை | யா / உடுவில் மகளிர் கல்லூரி |
| 32. இணுவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 33. யா இணுவில் அமெரிக்கன்மிசன் த. க பா | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 34. யா இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 35. யா இணுவில் சைவப்பிரகாச ம. வித்தியாலயம் | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 36. யா தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை | யா / தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை |
| 37. தாவடி சைவ இளைஞர் சங்கம் | யா / தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை |
| 38. யா ஏழாலை தெற்கு அமெரிக்கன்மிசன் த க பா | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 39. யா ஏழாலை முருகன் வித்தியாலயம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 40. யா ஏழாலை தெற்கு இந்து த. க. பாடசாலை | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 41. யா ஏழாலை மகாவித்தியாலயம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 42: யா ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 43: ஏழாலை வடமேற்குகிராமஅபி:வி:சங்கமண்டபம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 44: விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் குப்பிளான் | யா / புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம் |
| 45: யா குப்பிளான் விக்கினேஸ்வரா ம: வித் | யா / புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம் |

## வாக்கெடுப்பு பிரிவு 'உ' கோப்பாய்

| | |
|---|---|
| 1. யா புன்னாலைக்கட்டுவன் அரசினர் த. க. பாட | யா / வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 2. யா ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | யா / வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 3. யா வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் | யா / வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 4. யா வசாவிளான் றோ: கத்தோலிக்க த.க.பாட | யா / வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் |
| 5. அச்சுவேலி ப. நோ. கூ. ச. கிளை இல. 4/2 | யா / அச்சுவேலி மகா வித்தியாலயம் |
| 6. யா இடைக்காடு மகாவித்தியாலயம் | யா / கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 7. யா வளலாய் அமெரிக்கன் மிசன் த. க. பாட. | யா / கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 8. பத்தமேனி நெசவு நிலையம் | யா / கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 9 யா பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் | யா / கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 10. யா அச்சுவேலி மகாவித்தியாலயம் | யா / அச்சுவேலி மகா வித்தியாலயம் |
| 11. யா அச்சுவேலி சரஸ்வதி வி. மண்டபம் இல 1 | யா / அச்சுவேலி மகா வித்தியாலயம் |
| 12. யா அச்சுவேலி புனித திறேசா றோ க த ம பாட | யா / அச்சுவேலி மகா வித்தியாலயம் |
| 13. யா அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் மண்டபம் இல. 2 | யா / அச்சுவேலி மகா வித்தியாலயம் |
| 14. அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் | யா / அச்சுவேலி மகா வித்தியாலயம் |
| 15. யா தோப்பு அருள்நந்தி வித்தியாலயம் | யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி |
| 16. யா புத்தூர் மெதடிஸ்ற் மிசன் த. க: பாட | யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி |
| 17. யா புத்தூர் ஸ்ரீ பஞ்சசீல வித்தியாலயம் | யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி |
| 18. யா வாதரத்தை விகனேஸ்வர வித்தியாலயம் | யா / புத்தூர் ஸ்ரீ சேமாஸ்கந்த கல்லூரி |
| 19. நவக்கிரி ப.நோ.கூ ச.கட்டிடம், புத்தூர் மேற்கு | யா / புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி |
| 20. யா ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம் | யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி |
| 21. யா புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி | யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி |
| 22. யா சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சிறுப்பிட்டி மேற்கு | யா / சிறுப்பிட்டி இந்து த. க. பாடசாலை |
| 23. யா சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாட | யா / சிறுப்பிட்டி இந்து த. க. பாடசாலை |
| 24. யா அச்செழு மெதடிஸ்ற் மிசன் த.க.பாடசாலை | யா ஊரெழு கணேச வித்தியாலயம் |
| 25. யா நீர்வேலி றோமன் கதோலிக்க த. க. பாட | யா ஊரெழு கணேச வித்தியாலயம் |
| 26. யா அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி | யா அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி |
| 27. வலி-கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம் கிளை இல. 3, நீர்வேலி தெற்கு | யா அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி |
| 28. ஸ்ரீ சுப்பிரமணிய சனமூக நிலையம், நீர்வேலி | யா அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி |
| 29. யா ஊரெழு கணேசவித்தியாலயம் | யா ஊரெழு கணேச வித்தியாலயம் |
| 30 யா ஊரெழு கணேசவித்தியாலயம் | யா ஊரெழு கணேச வித்தியாலயம் |
| 31. கிராம முன்னேற்றச் சங்கம், கைத்தொழில் நிலையம்; உரும்பராய் கிழக்கு | யா உருப்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம் |
| 32, யா உரும்பராய் சைவத் தமிழ் வி ஆரம்பப்பிரிவு | யா உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம் |
| 33. யா உரும்பராய் றோ. க. த. க. பாடசாலை | யா உரும்பிராய் சைவ தமிழ் வுத்தியாலயம் |
| 34: யா உரும்பராய் சந்திரோதயா வித்தியாலயம் | யா உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம் |
| 35. யா உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | யா உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம் |
| 36: யா உரும்பராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையம் | யா உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம் |
| 37 யா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | யா கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம் |
| 38. கோப்பாய் வடக்கு சனசமூகநிலைய கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் | யா கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம் |
| 39. யா கோப்பாய் வடக்கு றோ. க. த. க.பாடசாலை | யா கோப்பாய் நாவலர் இ. த. க. பாடசாலை |
| 40. யா கோப்பாய் நாவலர் இ. த. க. பாடசாலை | யா கோப்பாய் நாவலர் இ. த. க. பாடசாலை |
| 41. யா கோப்பாய் தெற்கு றோ. க த. க.பாடசாலை | யா கோப்பாய் நாவலர் இ. த. க. பாடசாலை |
| 42. யா இருபாலை இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை | யா இருபாலை இலங்கை திருச்சபையின் த. கலவன் பாடசாலை |
| 43. யா இருபாலை இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை | யா இருபாலை இலங்கை திருச்சபையின் த. கலவன் பாடசாலை |
| 44. யா கோப்பாய் மகாவித்தியாலயம் | யா கோப்பாய் மகா வித்தியாலயம் |
| 45. கலைமணி சனசமூக நிலையம் கட்டப்பிராய் | யா கோப்பாய் மகா வித்தியாலயம் |

## வாக்கெடுப்பு பிரிவு 'ஊ' உடுப்பிட்டி

| | |
|---|---|
| 1. யா கரணவாய் மகா வித்தியாலயம் | யா கரணவாய் மகா வித்தியாலயம் |
| 2. யா கரணவாய் மகா வித்தியாலயம் | யா கரணவாய் மகா வித்தியாலயம் |
| 3. யா கரணவாய் மணியகாரன் தோட்டம் வித்தியாலயம் | யா கரணவாய் மகா வித்தியாலயம் |
| 4. யா கரணவாய் வேதாராணியேஸ்வர வித்தியாலயம் | யா கரணவாய் மகா வித்தியாலயம் |
| 5. யா கப்பூது இ. த. க. பாடசாலை | யா கரணவாய் மகா வித்தியாலயம் |
| 6. கலைநேசன் சனசமூக நிலையம், கல்லுவம் | யா கரணவாய் மகா வித்தியாலயம் |
| 7. யா உடுப்பிட்டி அ. மி. கல்லூரி | யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 8. யா உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம் | யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 9. யா கம்பர்மலை அரசினர் த. க. பாடசாலை | யா வல்வெட்டி இ. த. க. பாடசாலை |
| 10. யா கெருடாவில் இ. த. க. பாடசாலை | யா தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் |
| 11. யா தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் | யா தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் |
| 12. யா வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம் | யா வல்வை மகளிர் மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை |
| 13. யா வல்வெட்டித்துறை றோ. க. த. க. பாடசாலை | யா வல்வை மகளிர் மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை |
| 14. யா பொலிகண்டி அ. மி த. க. பாடசாலை | யா பொலிகண்டி இந்து சபை த க பாடசாலை |
| 15. யா வல்வெட்டித்துறை அ. மி. த. க. பா. | யா வல்வை மகளிர் மகா வித்தியாலயம்-வல்வெட்டித்துறை |
| 16. வல்வை சனசமூக சேவா நிலையம், வல்வெட்டி. | யா வல்வை மகளிர் மகா வித்தியாலயம்-வல்வெட்டித்துறை |
| 17. யா சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை | யா வல்வை மகளிர் மகா வித்தியாலயம்-வல்வெட்டித்துறை |
| 18 யா வல்வெட்டி அ. மி. த. க. பாடசாலை | யா வல்வெட்டி இந்து த. க. பாடசாலை |
| 19. யா வல்வெட்டி இ. த. க. பாடசாலை (ஆண் வாக்காளர்கள்) | யா வல்வெட்டி இந்து த. க. பாடசாலை (ஆண் வாக்காளர்) |
| யா வல்வெட்டி இ. த. க. பாடசாலை (பெண் வாக்காளர்கள்) | யா வல்வெட்டி இந்து த. க. பாடசாலை (பெண் வாக்காளர்) |
| 20. யா பொலிகண்டி இந்துசபை த. க. பா. | யா பொலிகண்டி இந்து சபை த. க.பாடசாலை |
| 21. யா கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் | யா கரணவாய் தாமோதர வித்தியாலயம் |
| 22. யா கரணவாய் தாமோதர வித்தியாலயம் | யா கரணவாய் தாமோதர வித்தியாலயம் |
| 23. கொற்றாவத்தை மத்திய சனசமூக நிலையம் | யா கரணவாய் தாமோதர வித்தியாலயம் |
| 24. யா இமையாணன் அரசினர் த. க. பாட. | யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 25: யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 26. யா நெல்லியடி மெ. மி. த. க பாடசாலை | யா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 27. யா நெல்லியடி ம. ம. வித்தியாலயம் | யா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 28. யா நெல்லியடி ம. ம. வித்தியாலயம் | யா துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 29. யா ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி | யா கட்டைவேலி யக்கரு விநாயகர் வித்தியாலயம் |
| 30. யா கட்டைவேலி மெ. மி த. க. பாடசாலை | யா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 31. யா கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயம் | யா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 32. யா வதிரி திரு இருதயக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு | யா விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி |
| 33. யா விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி | யா துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 34. யா துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் | யா துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 35. யா துன்னாலை தெற்கு அரசினர் த க. பாட | யா துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 36. யா துன்னாலை தெற்கு அரசினர் த. க. பாட | யா விக்னேஸ்வராக் கல்லூரி |
| 37. யா கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் | யா விக்னேஸ்வராக் கல்லூரி |
| 38. யா கட்டைவேலி யாக்கரு விநாயகா வித்தி | யா கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம் |
| 39. யா கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தி | யா கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம் |

## வாக்கெடுப்பு பிரிவு 'எ' பருத்தித்துறை

| | |
|---|---|
| 1. யா அல்வாய் அம்பாள் அரசினர் த. க. பாட | யா அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் |
| 2. யா மேலைப் புலோலி சைவப்பிரகாச வி. (பாலர் பிரிவு) | யா அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் |
| 3. யா அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் | யா அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் |
| 4. யா திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் | யா திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் |
| 5. அல்வாய் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் | யா திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் |
| 6. யா அல்வாய் வடக்கு இந்து த க. பாடசாலை (சுப்பிரமணிய வித்தியாலயம்) | யா அல்லாய் சின்னத்தம்பி வித்தியாலயம் |
| 7. யா வதிரி வடக்கு மெதடிஸ்ற் மி. த. க பாட | யா அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் |
| 8. யா அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், அல்வாய் தெற்கு | யா அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் |
| 9. யா துன்னாலை மேற்கு மெதடிஸ்ற் மி.த.க பாட | யா புலோலி மெ. மி. த. க. பாடசாலை |
| 10. யா மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் | யா மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 11. முன்னைய கிராம கோட்டு கட்டிடம் புலோலி | உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பருத்தித்துறை |
| 12 குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் | உதவி அரசாங்க அதிபர் பணிமனை பருத்தித்துறை |
| 13. யா புலோலி மெதடிஸ்ற் மி. த. க. பாடசாலை | யா புலோலி மெ, மி. த. க பாடசாலை |
| 14. யா புற்றளை மகா வித்தியாலயம் | யா புலோலி மெ மி. த. க. பாடசாலை |
| 15. யா கற்கோவளம் மெதடிஸ்ற் மி த. க பாட | யா கல்லடி றோ. க. த. க பாடசாலை |
| 16. சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் | யா மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 17. யா ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை | பருத்தித்துறை பழைய சந்தை |
| 18. சுங்க அலுவலகம், பருத்தித்துறை | பருத்தித்துறை பழைய சந்தை |
| 19. பருத்தித்துறை நகர சபை பொதுநூல் நிலையம் | பருத்தித்துறை பழைய சந்தை |
| 20. யா கலட்டி றோமன் கத்தோலிக்க த. க. பாட | யா கலட்டி றோ. க த. க. பாடசாலை |
| 21. நெல்லண்டை நெசவு நிலையம், தும்பளை | யா கலட்டி றோ. க: த. க. பாடசாலை |
| 22. யா வேலாயுதம் மகா வித்தியாலயம்,பருத்தித்: | பருத்தித்துறை பழைய சந்தை |
| 23. யா தட்டாதெரு மெதடிஸ்ற் மி. த க பாட | உதவி அரசாங்க அதிபர் பணிமனை பருத்தித்துறை |
| 24. யா தட்டாதெரு மெதடிஸ்ற் மி த க பாட | யா மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 25. யா குடத்தனை அரசினர் கரையூர் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை | யா குடத்தனை அரசினர் த. க,பாடசாலை |
| 26. யா குடத்தனை அரசினர் த. க. பாடசாலை | யா குடத்தனை அரசினர் த. க. பாடசாலை |
| 27 அம்பன் கமநலச்சேவை நிலையக் கட்டிடம் | யா நாகர்கோவில் அ. மி .த. க பாடசாலை |
| 28. யா நாகர்கோவில் அ. மி. த. க. பாடசாலை | யா நாகர்கோவில் அ. மி. த. க. பாடசாலை |
| 29. யா செம்பியன்பற்று அரசினர் த. க. பாட | யா செம்பியன்பற்று அரசினர் த. க. பாடசாலை |
| 30. யா தாளையடி றோ க. த க. பாடசாலை | யா செம்பியன்பற்று அரசினர் த. க. பாடசாலை |
| 31. யா மருதங்கேணி இ த. க பாடசாலை | யா மருதங்கேணி இந்து த. க. பாடசாலை |
| 32. உடுத்துறை பாரதி சனசமூக நிலையம் | யா மருதங்கேணி இந்து த. க. பாடசாலை |
| 33. யா ஆழியவளை இலங்கை கிறிஸ்தவாலய தமிழ்க் கலவன் பாடசாலை | யா ஆழியவளை இலங்கைத் திருச்சபை த. க. பாட |
| 34. யா வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி | யா ஆழியவளை இலங்கைத் திருச்சபை த. க. பாட |
| 35. யா போக்கறுப்பு றோ. க த. க. பாடசாலை | யா ஆழியவளை இலங்கைத் திருச்சபை த. க. பாட |
| 36. சுண்டிக்குளம் உப தபால் அலுவலகக் கட்டிடம் | யா ஆழியவளை இலங்கைத் திருச்சபை த. க. பாட |

## வாக்கெடுப்பு பிரிவு 'ஏ' சாவகச்சேரி

| | |
|---|---|
| 1. யா கைதடி குருசாமி வித்தியாலயம் | யா கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் |
| 2. கைதடி மேற்கு சனசமூக நிலைய வாசிகசாலை | யா கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் |
| 3. யா கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா கைதடி முத்துக்குமாரசாமி வித்திபாலயம் |
| 4. யா கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம் | யா கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் |
| 5. யா நாவற்குளி மகா வித்தியாலயம் | யா நாவற்குளி மகா வித்தியாலயம் |
| 6. யா நாவற்குளி மகா வித்தியாலயம் | யா நாவற்குளி மகா வித்தியாலயம் |
| 7 யா கோவிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம் | யா நாவற்குளி மகா வித்தியாலயம் |
| 8 மறவன்புலவு கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் | யா நாவற்குளி மகா வித்தியாலயம் |
| 9 யா தனங்கிளப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | யா நாவற்குளி மகா வித்தியாலயம் |
| 10 யா மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் | யா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் |
| 11 மீசாலை தெற்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் | யா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் |
| 12 யா சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 13 யா சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 14 யா கல்வயல் சண்முகானந்த வித்தியாலயம் | யா சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| 15 யா நுணாவில் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | யா நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி |
| 16 நுணாவில் கிழக்கு சர்வ சாதன சங்க சனசமூக நிலையம் | யா நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி |
| 17 யா நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி |
| 18 யா சாவகச்சேரி சத்தியம்மன் தமிழ் கலவன் பாடசாலை | யா டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி |
| 19 யா ட்றிபேக் கல்லூரி சாவகச்சேரி | யா டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி |
| 20 இத்தியடி பிள்ளையார் கோவில் மடம் | யா சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| 21 யா கைதடி-நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | யா கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை |
| 22 யா மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை | யா கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை |
| 23. யா மட்டுவில் கமலாசனி வித்துயாலயம் | யா கைதடி நுணாவில் அ. த. க பாடசாலை |
| 24. யா மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | யா மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் |
| 25: யா மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் | யா மட்டுவில் கமலாகினி வித்திய யியம் |
| 26. சரசாலை தெற்கு மத்திய கிராம முன்னேற்ற சங்க மண்டபம் | யா மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் |
| 27. யா சரசாலை கணேச வித்தியாலயம் | யா மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் |
| 28. யா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் |
| 28. மீசாலை வடக்கு நெசவு நிலையம் (கிராம முனேற்றச் சங்க மண்டபம்) | யா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் |
| 30. யா கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு தமிழ்க்கலவன் பாடசாலை | யா கொடிகாமம் அ. த. க பாடசாலை |
| 31. யா விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | யா மிருசுவில் றோ. க த. க. பாடசாலை |
| 32. யா கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | யா கொடிகாமம் அ. த. க. பாடசாலை |
| 33. யா அல்லாரை அரசினர் தமிழ்க்கலவன் பாட | யா கொடிகாமம் அ. த. க. பாடசாலை |
| 34. யா மிருசுவில் றோமன் கத்தோலிக்க த.க.பாட | யா மிருசுவில் றோ. க. த க. பாடசாலை |
| 35. யா எழுதுமட்டுவாள் அரசினர் த.க.பாடசாலை | யா எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம் |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## An Opportunity

for
School Leavers with
G. C. E (O/L) & (A/L) Passes!
Classes
for
**London IAB & CIMA Examinations!**

For details Please Contact :
**Education Officer,**
**M. P. C. S., Tellippalai.**
Before 15th February. (C/1189)

# சரியான உணவுப்பழக்கத்தை மாணவருக்கு பழக்க வேண்டும்

## சுகாதாரக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், பெப். 8

''சரியான உணவுப் பழக்கத்தை மாணவர் மத்தியில் புகுத்த வேண்டும். தாய் சவர்க்காரம் போட்டு கை கழுவுவதைப் பார்க்கும்போது தான் குழந்தையும் அதனைச் செய்யப் பார்க்கின்றது. அக்கா தூரிகை மூலம் பல் துலக்குவதைப் பார்க்கும் தம்பி தனக்கும் தூரிகை வாங்கித் தரும்படி கேட்கிறான். சரியான பழக்க வழக்கங்களை மாணவர்கள் பாடசாலையில் கடைப்பிடிப்பதன் மூலம் சமுதாயத்திலும் அவற்றைச் செயல்படுத்த முடியும்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி இலாகாவும் சுகாதார இலாகாவும் இணைந்து நடத்திய சுகாதாரக் கருத்தரங்கில் உரையாற்றும் பொழுது யாழ் மாவட்ட சுகாதாரக் கல்விப் போதனாசிரியர் திரு கா. வைத்தீஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தனது உரையில்,

'பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் நோய்கள் போஷாக்கின்மையால் ஏற்படுகின்றன.

இதற்கு முக்கிய காரணம் எமது மக்கள் பிழையான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதே'' என்றார்.

அதிபர் பூராஜா தமது உரையில் ''கண் பார்வைக் குறைபாட்டினை நீக்கவும், பல்வியாதியைப் போக்கவும் சுகாதாரப் பகுதியினர் முன்னுரிமை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

புங்குடுதீவு விஞ்ஞான வலய ஆலோசகர் திரு சே. ஜெயசீலன் கொத்தணி மட்டத்தில் சுகாதாரக் கல்விக் குழு ஒன்றை நிறுவும்படியும் அதன்மூலம் செயல்திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

ஊர்காவற்றுறை மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் திரு ஏ. செல்லையா தமது உரையில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் மாணவர்களின் குறைபாடுகளை ஆசிரியர்கள் இனங்காண வேண்டும். அவற்றை நிவர்த்தி செய்து ஆரோக்கியமாக வாழ அனைவரும் வழி வகுக்க வேண்டும்.

உணவுப் பற்றாக்குறையால் போஷாக்கின்மை ஏற்படுகிறது. அதே வேளை அதிக உணவை உண்பதால் இருதய வியாதிகள், சலரோகம், அதி இரத்த அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இளம் வயதிலேயே சமபல உணவைப் பற்றி மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும்''

இப்படி அவர் கூறினார். (ச-18)

## அறுவடை செய்து நிதி சேகரிப்பு

மண்டைதீவு, பெப். 8

மண்டைதீவு இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் தங்கள் கழகத்துக்கு நிதி சேகரிக்கு முகமாக இப்பகுதி வயல்களில் அறுவடை வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-88)

# அதிபரிடம் நிர்வாகத்திறமை நிறைந்திருக்க வேண்டும்

பண்டத்தரிப்பு, பெப். 8

''பாடசாலையும் அதனைச் சூழவுள்ள பிரதேசமும் கல்வியால் சிறக்க அதிபரிடத்தில் நிர்வாகத் திறமையும் சிறப்பான கற்பித்தல் முறைகளும் நிறைந்திருக்க வேண்டும்''.

காங்கேசன்துறைத் தொகுதி வட்டாரக் கல்விஅதிகாரி திரு ப. சண்முகராசா மேற்கண்டவாறு கூறினார்.

14 வருடங்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் மாதகல் சென்ஜோசப் கல்லூரியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அதிபர் திரு. எ. தம்பிப்பிள்ளைக்கு அளித்த பிரிவுபசார சேவைநலம் பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

புதிய அதிபர் திரு. ச. அருள் சுப்பிரமணியம் தலைமையில் வைபவம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ஆங்கிலக் கல்வி அதிகாரி ஆர். கே. குலசேகரம் கலந்து கொண்டார். சங்கீத ஆசிரியர் சங்கீத பூஷணம் எஸ். வி. பரமலிங்கம் பாராட்டுப் பத்திரத்தை வாசித்து வழங்கினார். கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் சார்பில் திரு. ப. சண்முகராசா (கல்வி அதிகாரி) பொன்னாடை போர்த்தினார். திரு ஆர். கே. குலசேகரம் பொற்கிழி வழங்கினார். (ச-12)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### பொன்னர் நாகமுத்து

மண்ணகத்தில்: 12. 05. 1917    விண்ணகத்தில்: 09. 01. 1989

எமது குலவிளக்கே! நீங்கள் மறைந்து நாட்கள் ஓடினாலும்
எமது நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்!
எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

மகன்மார்: பொ. திருநாவுக்கரசு
பொ. செல்வராஜா
மருமகன்: செ. சின்னராசா.
மகள்மார், மருமக்கள், மகன்மார்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

நவாலி வடக்கு.    (8927)

---

## 90-ம் நாள் நினைவலைகள்



செல்வன்
### இ. ஆனந்தராஜா [ராஜன்]

மலர்வு: 22-10-1964    உதிர்வு: 11-11-1988

எங்கள் குலவிளக்கே! எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீ சென்று 90 தினங்கள் கடந்தாலும் உன் நினைவையும் துயரையும் மறக்கமுடியாமல் தவிக்கும்

அம்மா, சகோதரன், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

ஆவரங்கால்,
புத்தூர்.    (9353)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்லர் நாகமணி
அவர்கள்

அன்னையின் மடியில்: 22.07.1944    ஆண்டவன் அடியில்: 21.01.1988

ஓராண்டு உருண்டோடியது ஐயா!
ஓயாது நம் விழிகளில் கண்ணீர்தான் ஐயா!
சிவத் தொண்டு புரிந்தீரோ — அன்று
சிவனடி சேர்ந்தீரோ — இன்று.

08-02 1989 இன்று புதன்கிழமை அன்னாரின் ஓராண்டு நினைவு தினத்தில் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

தெல்லிப்பளை கிழக்கு.    (9496)

---

## 41 ஆம்நாள் நினைவஞ்சலி



### சுரேஸ்குமார்
[லோலோ - புன்னாலைக்கட்டுவன்]

மலர்வு: 16-07-1969    உதிர்வு: 30 12-1988

புன்னைநகரின் தவப்புதல்வன் இவன்
தன்னை மறந்தான்;
தலைமையைத் தொடர்ந்தான்
மண்ணை நினைத்தான்; மக்களை நினைத்தான்
மரணத்தைத்தழுவி ஒளியைக்காட்டினான்.

நண்பர்கள்.

[9491]

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஆறுமுகம் ஏரம்பு

தோற்றம்: 08 - 02 - 1912    மறைவு: 31 - 01 - 1987

திதி: 08 — 02 — 1989

ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

அன்பின் திருவுருவாய் அறிவின் சிகரமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் தாங்கள்
வாழ்ந்து மறைந்து ஈராண்டுகள் ஆகியும்

உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு பிரியவில்லை, இனி வாழும் காலம் யாவும் அந்நினைவுகள் எங்களை விட்டு நீங்காது.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

137/1, அம்பலவாணர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.    (9361)

---

## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08-12-1975

அகாலமரணம்: 08 02-1987

### செல்வன் கிஷந்தன் இராஜரட்ணம்

(மகாஜனக் கல்லூரி மாணவன்)
அப்பா கட்டியகோட்டை சரிந்ததடா!
அம்மா விடும் கண்ணீர் ஆறாய்ப் பெருகுதடா!
உன் ஆசைத் தம்பி தனித்து நின்று தவியாய்த் தவிக்கிறானடா!
உங்கள் பிரிவால் நித்தம் துயருறும்
அன்பு அம்மா. தம்பி

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை என்றும் வேண்டுகின்றோம்
கடவுள் அறிவார் யாவும்.

தெல்லிப்பளை    (9480)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் A. H. ஸ்ரனிஸ்லஸ்
(அருள்ராஜா)
(விவசாயத் திணைக்களம், மன்னார்)

மலர்வு: 24 11-1934    உதிர்வு: 08 01-1989

அன்பின் அணிகலனாய்,
பண்பின் உறைவிடமாய்த்
திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மைவிட்டுப் பிரிந்து ஒரு மாதமாகியும்
உங்கள் நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு நீங்காது.
உங்கள் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்.

★ அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிய அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.    (9486)

---

## 31 ஆம்நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 9-1-1912

இறப்பு: 9-1-1989

### அமரர் வை. சி. அம்பலவாணர்
(ஓய்வு பெற்ற C. W. E காசாளர் வட்டுக்கோட்டை)

அன்புக்கும், பண்புக்கும், அறிவுக்கும் இருப்பிடமாய் இன்பமுடன் இல்லறம் நடாத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.    (9402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

**பொருள்:**

மிகவும் நெருங்கி வாழ்கை இருந்து கொண்டே கெடுதி செய்கின்றவனைப் பொருள் செலவு செய்தாயினும் பகைவனாக வெல்ல வேண்டும். (என்று நினைப்பார்கள்)


# உதயன்

உண்மை – விழிப்பு – ஆசிரியம்

இல. 192/3 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
08. 2. 1989 த. பெ. இல 23


## தவிர்க்க முடியாத மாற்றம்

திட்டமிட்ட முறையில், கிராமப் புறங்களில் ஆங்கில போதனை வகுப்புகளை நடத்துவதற்கு இலங்கை ஆங்கிலம் பேசும் சங்கம் உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி. கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசுமளவுக்குப் போதனை நடத்துவது முதற்கட்டமாக இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சி வரவேற்கத் தக்க ஒன்றாகும். பிரஸ்தாப ஆங்கில வகுப்புகளை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நடத்த வேண்டும். வசதி குறைந்த மாணவருக்கு இலவசமாக நடத்தினால் அது மெச்சத் தக்கதாக அமையும். தகுதிவாய்ந்த, திறமையான ஆசிரியர்களை இப்பணியில் ஈடுபடுத்த வேண்டியது கண்ணும் கருத்துமான பணியாகும்.

தற்போதைய கல்விப் பின்னணியில் ஆங்கில போதனை மிக மிக அவசியமானது. சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் எமது மாணவர்கள் தேர்ச்சி பெறத் தவறியதால் அவர்கள் பல வழிகளிலும், வகைகளிலும் பின்னடைந்து போவதை நடைமுறையில் காண்கிறோம்.

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாத காரணத்தால் இந்நாட்டு இளைஞர்களுக்கு உயர்கல்வி தொடக்கம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு வரை, எட்டாக் கனியாக இருந்து வருவதை அனுபவத்தில் பார்க்கிறோம்.

நிலத்தில் ஊற்றிய பால் திரும்ப வருமா?

இன்றைய இளைஞருக்கு ஏற்பட்ட கஷ்டம், வருங்கால இளைஞர்களான இப்போதைய மாணவர்களுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது.

வெளி உலகத்தை அறிய, உலகின் அபிவிருத்தி ஓட்டத்தைத் தெரிந்துகொள்ள அறிவை வளப்படுத்த ஆங்கிலமும் தேவை என்பது முரண்பாடு காணமுடியாத முக்கிய உண்மை.

இதை உணர்ந்து, பாடசாலைகளிலும், பாடசாலைகளுக்கு வெளியேயும் ஆங்கிலம் புகட்டப்பட வேண்டும். அது "அலர்ஜி" என்று மாணவர்கள் கூறிக்கொள்ள இடம் வைக்கலாகாது.

ஆங்கிலத்துக்கு, அரசியலமைப்புச் சட்டத்தில் இணைப்புமொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. அது வெறும் சட்டவிதியாக இல்லாமல் செயல்வடிவம் பெறும் விதத்தில் கல்வி போதனையில் மாற்றம் செய்வது தவிர்க்க முடியாததாகும்; தாமதப்படுத்தக் கூடியதும் அல்ல.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றோரின் சராசரி எண்ணிக்கை 1956ஆம் ஆண்டில் ஐந்தசத விதத்தில் இருந்து இப்போது 0 001 சத விதமாக வீழ்ச்சி கண்டிருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அப்போதும், இப்போதும் அந்தக் குறைந்த சத விதத்தினரே, ஆளுமையும் திறமையும் மிக்க செல்வாக்குள்ள பிரிவினராக விளங்குகிறார்கள் என்ற தகவலும் வெளியிடப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும், ஆங்கிலத்தின் அவசியம் வெளிப்படையானது. அதனைப் புறக்கணித்ததால் உண்டான கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் இலங்கையர்கள். அந்தத் தவறை மீண்டும் விடாமல் பாடசாலைகளிலும், வெளியிலும் ஆங்கில போதனைக்கு வழி செய்வது மிக அவசியமானதாகும்.

வடக்கு,கிழக்கில்

## நீதித்துறை இயங்க நடவடிக்கை எடுக்கும்படி

### அமைச்சர் பணிப்பு

கொழும்பு பெப் 8

எதிர்வரும்மார்ச்மாதம் முதலாம் திகதியில் இருந்து கிழக்கு மாகாணத்தில் நீதி பரிபாலனத் துறை மீண்டும் இயங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நீதி கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கிறார்.

கடந்த வாரம் கிழக்கு மாகாணத்திற்கு அமைச்சர் விஜயம் செய்தார். அதன் பின்னரே அமைச்சச் செயலாளருக்கு இந்த பணிப்புரையை விடுத்தார்.

வடபகுதியிலும் நீதி பரிபாலனத்துறை மீண்டும் இயங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்படியும் அமைச்சர் தனது அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

★ 360 பேர் மரணம் ★ 70 ஆயிரம் பேர் காயம் ★ 22 ஆயிரம் பேர் கைது

## தாயக மீட்புப் போராட்டத்தில் பலஸ்தீனியரின் இழப்புக்கள்!

ஜெருசலம், பெப் 7

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் ரோந்து செய்யும் இஸ்ரவேலிய ராணுவத்தினரைக் கற்களால் தாக்குபவர்களில் 67 சத வீதமானோர் 6-14 வயதுக்குட்பட்ட சிறுவர்களே என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேலிய பாதுகாப்பு அமைச்சர் ரபீன் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

1967 யுத்தத்தில் இஸ்ரவேலிய படைகளினால் மேற்குக்கரை, காஸா ஆகிய அரபுப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன.

இப்பிரதேசங்களை மீட்கும் போராட்டத்தை அங்கு வாழும் பலஸ்தீனியர்கள் 1987 டிசம்பரில் இருந்து நடத்திவருகின்றனர்.

இந்தப் பதினொரு மாதகால போராட்டத்தில் பலஸ்தீனியர்களுக்கு ஏற்பட்ட இழப்புப் பற்றி இஸ்ரவேலிய பாதுகாப்பு அமைச்சர் ரபீன் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

★ 360 பலஸ்தீனியர் கொல்லப்பட்டனர்.

★ 70 ஆயிரத்துக்கு அதிகமானோர் காயமடைந்தனர்.

★ 22ஆயிரத்திற்குஅதிமானோர் கைது செய்யப்பட்டுத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

★ இஸ்ரவேலிய ராணுவத்தினரைக் கற்களால் தாக்கும் பலஸ்தீனியரில் 67 சத வீதமானோர் 6-14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அரபாத் - அமெரிக்கப் பேச்சு: நிறுத்தும்படி இஸ்ரவேல் வேண்டுதல்

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களை உடனே நிறுத்தும்படி இஸ்ரவேல், அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

இஸ்ரவேல் அரசின் கோரிக்கை அடங்கிய கடிதம் நேற்று அதிகாரியினால் அமெரிக்க அரசிடம் கையளிக்கப்பட்டது.

பயங்கரவாதத்தை பலஸ்தீன விடுதலை இயக்கம் இன்னமும் கைவிடவில்லை என்று இஸ்ரவேல் அரசு தனது கோரிக்கைக்குக் காரணம் காட்டியிருக்கிறது.

அதற்கு உதாரணமாக, லெபனானில் இருந்து ஆயுதங்களுடன் 5 பலஸ்தீனியர்கள் இஸ்ரவேலுக்குள் நுழைய முயன்றபோது இஸ்ரவேலிய படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை டெல் அவிவ் அரசு சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஆவே வாக்குறுதியில் இருந்து பின்வாங்கிய பலஸ்தீன இயக்கத்துடன் அமெரிக்கா தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவதில் பிரயோசனம் ஏற்படப் போவதில்லை என்றும் இஸ்ரவேல் தெரிவித்தது.

பயங்கரவாதத்தைக் கைவிடுவதாக அரபாத் கூறியதைத் தொடர்ந்து அவருடன் அமெரிக்கா பேச்சுக்களை ஆரம்பித்தது தெரிந்ததே.

இஸ்ரவேலின் கோரிக்கை பற்றி வாஷிங்டன் பரிசீலனை செய்வதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் சார்லஸ் ரெட்மான் சொன்னார்.

## நமீபியா நிலை பற்றி ஐ.நா. செயலர் கவலை

ஐ.நா, பெப்.7

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் தாமதம் காணப்படுவது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ்டி குயிலர் கவலை தெரிவித்துள்ளார்.

நமீபியாவுக்கு அடுத்த எட்டு மாதங்களுக்குள் சுதந்திரம் வழங்க தென் ஆபிரிக்கா ஒப்புக்கொண்டிருப்பது தெரிந்ததே.

இது தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு அனுப்பப்படும் அமைதிப்படையில் எவ்வளவு பேர் இடம்பெற வேண்டும் என்பது குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

வீரர்களின் எண்ணிக்கை 4,500 ஆக இருக்க வேண்டும் என்று வல்லரசு நாடுகள் கூறுகின்றன. எண்ணிக்கை 7,500 ஆக இருக்கவேண்டும் என்று அணிசேரா நாடுகள் வற்புறுத்துகின்றன.

அமைதிப் படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் அது நமீபியாவில் சுதந்திரத் தேர்தலுக்கு வழிவகுக்காது என்று அணிசேரா இயக்கத் தலைவரான சிம்பாப்வே ஜனாதிபதி ரொபோட் முகாபே ஐ.நா. செயலாளருக்கு அறிவித்திருக்கிறார். (எ)

### ஆப்கன் பற்றிய அமெரிக்க நிலை!

வாஷிங்டன் பெப் 7

சோவியத் படை விலகலின் பின்னர் ஆப்கன் பற்றிய அமெரிக்காவின் நிலை எப்படி இருக்கும்?

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் செய்தியாளர் மாநாடு ஒன்றில் இக் கேள்விக்குப் பதில் அளித்தார்.

அவர் சொன்னதாவது:

மக்களின் அபிப்பிராயங்களுக்கு இடமளிக்கும் அரசாங்கம் ஒன்று ஸ்திரமாக அமைக்க உதவுவதே அமெரிக்காவின் பங்காக இருக்கும்.

இந்தப் பங்கை நாம் நிறைவேற்றுவது இலகுவான காரியம் அல்ல' என்று திரு. புஷ் சொன்னார்.

இது வரை காலமும் ஆப்கனியர்கள் தங்களைத் தாங்களே ஆளுவது அவர்களுக்கு உரிய விஷயம் என்ற நிலைப்பாட்டையே அமெரிக்கா கடைப்பிடிக்க வந்தது. (எ)

### ஆஸி. பிரதமர் உதவி

ஆஸ்திரேலிய பிரதமர் பொப் ஹோக் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார்.

பிரதமர் பெனாஸிர் பூட்டோ அவருக்கு விருந்துபசாரமளித்துக் கௌரவித்தார்.

பொதுநலவாய அமைப்பில் பாகிஸ்தான் மீண்டும் சேர தனது நாடு உதவும் என்று ஆஸி பிரதமர் உறுதி அளித்தார். (எ)

## ஆப்கனில் அரசு அமைவது பற்றி பெனஸிர் கருத்து

இஸ்லாமபாத், பெப் 7

ஆப்கனிஸ்தானை ஆளப் போகிறவர்கள் யார் என்பதை பதினைந்து கெரில்லாக் குழுக்கள் தான் முடிவுசெய்யவேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ அறிவித்தார்.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்ட்னாட்சேயுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னரே பெனஸிர் இக் கருத்தை வெளியிட்டார்.

ஆப்கனில் உள்ள டாக்டர் நஜிபுல்லா அரசுக்கு இனியும் முட்டுக்கொடுத்துக் கொண்டிருப்பதை சோவியத் யூனியன் நிறுத்திக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது என்றும் திருமதி பெனஸிர் பூட்டோ தெரிவித்தார்.

சோவியத்படை விலகலின் பின்ன படவுள்ள அரசில் ட லாவின் ஆ கட்டாயம் இ படவேண்டும் சோவியத் யூனியன் யுறுத்தி வருகிறது.

இதேவேளை - ப ந்து ஆப்கன் கெரில்லாக் குழுக்களும் வருகிற வெள்ளிக்கிழமை ராவல்பிண்டியில் முக்கிய கூட்டம் ஒன்றை நடத்த இருக்கிறது.

ஆப்கன் இடைக்கால அரசு எப்படி அமையப் போகிறது என்பது இக் கூட்டத்தில்தான் தீர்மானிக்கப்படவுள்ளது.

நேற்று வரை ஆப்கனுக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று காணும் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. (எ)

## ஆப்கனுக்குஐ.நாஉதவ பிரிட்டன் எதிர்ப்பு

ஐ. நா. பெப்.7

நஜீப் அரசு பதவியில் இருக்கும்வரை ஆப்கனுக்கு நிவாரண உதவிகளை ஐ. நா. அனுப்புவதற்கு பிரிட்டன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நஜீப் அரசு தொடர்ந்து பதவியில் இருப்பதற்கே நிவாரண உதவிகள் அனுப்புவது உதவும் எனவும் பிரிட்டன் ஐ.நாவுக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை — இன்று முதல்காபூலுக்கு விமான மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக ஐ.நா அறிவித்தது. (எ)

## 4 அணுகுண்டுகளைத் தயாரிக்கும் வல்லமை பாகிஸ்தானிடம்

வாஷிங்டன், பெப். 8

பாகிஸ்தான் 4 அணுக்குண்டுகளை தயாரிக்கக் கூடிய வல்லமையைப் பெற்றிருப்பதாக 'நியூஸ்வீக்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது:

அணுக்குண்டு தயாரிக்கும் எண்ணம் இல்லை என்பதை தெளிவாகத் தெரிவிக்காதவரை பாகிஸ்தானுக்கான அமெரிக்க உதவிகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் ஒருவர் கேட்டுள்ளார். (எ)

### ஆஸி. பிரதமர் நாளை டில்லி விஜயம்

4 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆஸி பிரதமர் பொப் ஹோக் நாளைவியாழன் இந்தியா விஜயம் செய்கிறார். (எ)

## கொலம்பியாவில் போதைவஸ்து

பொகொடோ, பெப். 7

கொலம்பியாவின் வட பகுதியில் கொகெயின் போதைவஸ்தை உற்பத்தி செய்யும் 20 தொழிற்சாலைகளை அரசுப்படைகள் நிர்மூலமாக்கின என்று அறிவிக்கப்பட்டது.

காட்டின் நடுவில் இத் தொழிற்சாலைகள் அமைந்திருந்தன.

இத்தொழிற்சாலைகளில் வாரம் ஒன்றுக்கு 50 தொன் போதைவஸ்து தயாரிக்கப்பட்டு வந்தது. இது தொடர்பாக பொலீஸார் 26 பேரைக் கைதுசெய்து காவலில் வைத்தனர். (எ)

பாதுகாப்புக் கருதி இடம் மாறிய

## வங்கிக் கிளைகள் மீண்டும் பழைய இடங்களில்

மாங்குளம், பெப். 8

மாங்குளம் ஒட்டுசுட்டான் பகுதிகளில் இருந்து பாதுகாப்புக் கருதி இடம் மாறிய இலங்கை வங்கிக்கிளைகள் மீண்டும் அதே இடங்களில் இயங்க உள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேற்கொண்டுவருகிறார்.

இம் மாகத்தில் இந்த வங்கிக் கிளைகள் மீண்டும் பழைய இடங்களில் திறக்கப்பட இருப்பதாக இலங்கை வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

(க-94)

## சிகிரியாப் பகுதியில் 80பண்டையகிராமங்கள்

### ஆராய்ச்சியில் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப் 8

சிகிரியாப் பிரதேசத்தில் 80 பண்டையக் கிராமங்கள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகப் புதைபொருளாராய்ச்சியாளர் குழு ஒன்று அறிவித்திருக்கிறது

பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

சிகிரியா மலையின் கிழக்குப்பகுதியில் உள்ள கிரி, சிகிரி, மிரிஸ்கோன ஆகிய ஆற்றுப் படுக்கைகளை ஒட்டி அக் கிராமங்கள் இருந்ததற்கான சான்றுகளும் கிராமங்களின் இடிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

கிகிரியா - தம்புள்ள பிராந்தியத்தில் 200 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை புதைபொருளாராய்ச்சிக் குழுவினர் அகழ்வாராய்ச்சி செய்து வருகின்றனர்.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ளவே இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது

பிந்திய அனுராதபுரம் - பொலன்னறுவ காலத்தைச் சேர்ந்த கிராமங்களாக அவை இருக்கலாம் என பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. விவரமான அறிக்கை கிடைக்கும்வரை நாம் பொறுத்திருக்கவேண்டும்.

இப்படி பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா சொன்னார்.

(ஒ-எ)

### பெருமரங்கள் தறிப்பு

காரைநகரின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள மிகப் பெரும் மரங்கள் அண்மைக் காலத்தில் தறிக்கப்பட்டுள்ளன.

(இ - 78)

### உதவி அரச அதிபருக்கு வரவேற்பு

தாளையடி, பெப், 8

வடமராட்சி கிழக்கு புதிய உதவி அரசாங்க அதிபர் திரு. தி. சந்திரசேகரத்துக்கு ஆழியவளை கிராம அபிவிருத்திச் சங்கத்தினாலும் பொதுமக்களாலும் வரவேற்பு உபசார வைபவம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

8 ஆம் திகதி புதன் கிழமை இவ் வைபவம் ஆழியவளையில் நடைபெறவுள்ளது. (இ-144)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 8

சங்குவேலி ஸ்ரீகாளி தேவி அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 8ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

(க)

# சமய சந்நிதிகளில்

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் பெப் 8

நயினாதீவு பெருங்குளம் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெறும் (க-117)

### விளுவனை அம்பாள் கும்பாபிஷேகம்

பச்சிலைப்பள்ளி, பெப். 8

எழுதுமட்டுவாள் விளுவனை அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்று தொடர்ந்து சங்காபிஷேகம் நிகழவுள்ளது.

(க-117)

### கும்பாபிஷேகம்

வேலணை மேற்கு கிருஷ்ண பரமார்த்தா ஆலய மகாகும்பாபிஷேக விழா இன்று புதன் கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும். (இ-10)

### வராஹி அம்பாள் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் பெப் 8

கொக்குவில்-மேற்குகள்ளிக்கொக்கன் அருள்மிகு ஸ்ரீ வராஹி அம்பாள் கோயிலின் புனராவர்த்தன, அஷ்டபந்தன, பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.

### முருகமூர்த்தி ஆலய உற்சவம்

புங்குடுதீவு பெப்.8

புங்குடுதீவு கிழக்கு முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெற இருக்கிறது

19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 20 ஆம் திகதி திங்கட் கிழமை சமுத்திர தீர்த்தோற்சவமும், 21ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும்.

(இ-131)

### கோப்பாய் அம்மன்கோவில் அபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப் 8

கோப்பாய் தெற்கு பழையதெரு அம்மன் தேவஸ்தானத்தில் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை தைமூலத் துவாதசியில் 'மனோசக்தி' அம்மன் ஸ்தாபித்து அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. (க)

### சமயதினம்

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் 'இந்து சமய தினம்' 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெற இருக்கின்றது இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக திரு. சிவ. சண்முகவடிவேல் கலந்து கொள்ள இருக்கின்றார்.

### சங்கிராந்தி தீர்த்தம்

காரைநகர் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 30 மணியளவில் அம்பாளுக்கு சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறும்

அதைத் தொடர்ந்து விநாயகர் மூலாலயபரிவார மூர்த்திகளுக்கும் பூஜையாகி அம்பிகை வீதியுலா நடைபெற்று 6 மணியளவில் பொங்கல் பூஜை நிகழும்.

### தேர் புனரமைப்பு

துன்னாலை அருள்மிகு கோவிற்கடவை விநாயகராலய தேர் இரண்டு இலட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்பட்டு அழகுபடுத்தப் பட்டுள்ளது. இந்த ஆலய வருடாந்த மகோற்சவம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

### சித்திரத்தேர் அச்சேற்று விழா

மண்டைதீவு சித்தி விநாயகர் ஆலயத்தின் புதிய சித்திரத்தேரின் அச்சேற்று விழா தேர் திருப்பணிச்சபை தலைவர் திரு. க. மாணிக்கலிங்கம் தலைமையில் இம் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கின்றது.

இவ்விழாவில் பிரபல சிற்பவல்லுனரும் வித்தியா தரிசியுமான கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

(இ 88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

08 02 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

### வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு

## இன்று முதல் வெள்ளிவரை நேர்முகப் பரீட்சை!

### யாழ் கல்வித்திணைக்களத்தில்

யாழ்ப்பாணம், பெப் 8

இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

பகல் ஒரு மணி முதல் மாலை 5 மணிவரை யாழ் கல்வித் திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்கள் தமது பட்டதாரிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வேறுவிசேட தகைமைச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை போன்றவற்றுடன் சமுகம் தருமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

உள்வாரிப் பட்டதாரி மாணவர்கள் அல்லது இலங்கைக்கு வெளியே படித்த பட்டதாரி மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

### யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில்

## கட்டட மேற்பார்வை நெறி; 25மாணவர் சேர்க்கப்படுவர்

யாழ்ப்பாணம், பெப் 8

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட மேற்பார்வையாளர் பாடநெறிக்கு இருபத்தைந்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தேசிய பயிலுநர்சபையின் ஊடாகவே இதற்கான தெரிவு இடம்பெறும்.

இந்தப் பாடநெறியில் சேர்ந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைதேசிய பயிலுநர் சபைக்கு நேரடியாகவே அனுப்பிவைக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும். (ஓ-ஐ)

### வத்தேகம பகுதியில்

## வரிசையாக நிறுத்தப்பட்டு ஐவர் சுட்டுக் கொலை!

கொழும்பு, பெப் 8

வத்தேகம பொலிஸ் பகுதியில் புத்தருப்புவ என்னுமிடத்தில் கடந்த ஞாயிறிரவு ஐந்து பேர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது பற்றித் தெரிய வருவதாவது;

இனந்தெரியாத கோஷ்டி ஒன்று வீடு ஒன்றினுள் புகுந்து அங்கு வசித்து வந்தவர்களை வெளியே இழுத்து வந்து வரிசையாக நிற்க வைத்தனர் பின்னர் சுட ஆரம்பித்தனர்.

அந்த இடத்தில் மூவர் சுருண்டு விழுந்து இறந்தனர். ஒருவர் தடபி ஓட முயன்ற சமயம் சுடப்பட்டு இறந்தார்.

ஐந்தாம் நபரை, அந்த கோஷ்டி கடைசியாக சுட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றது. இத்தாக்குதலின் போது காயமடைந்த இரண்டு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

### குடிதண்ணீர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணங்களில் 250 குடிதண்ணீர் கிணறுகளை புனரமைப்பு செய்யவிருக்கிறது.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகள் குடியேறும் பகுதிகளில் இந்தத்திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது. (ஓ-ஐ)

### யாழ். பஸ்நிலையத்தில் பெண்ணிடம் காப்புகள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம், பெப் 8

வயோதிபப் பெண்ணை மிரட்டி கையில் இருந்த காப்புகளை பறித்துச் சென்றுள்ளார் இளைஞர் ஒருவர்.

நேற்றுப் பகல் யாழ். பஸ்நிலையத்தில் இச் சம்பவம் நடைபெற்றது புங்குடுதீவைச் சேர்ந்த சின்னத்துரை கனகம்மா (வயது 50) என்பவரே தனது காப்புகளை இழந்தவராவர்.

பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த அவரை இளைஞர் ஒருவர் கைகளை முறுக்கி வாயைப் பொத்திவிட்டு, காப்பை உருவிச் சென்றதாக யாழ். பொலிஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது. (ஓ-10)

### டி. ஐ. ஜி. கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், பெப். 8

வடக்கு, கிழக்குப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு மகேசன் செல்வரத்தினம் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

கடந்த சில தினங்களாக அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். இவருடன் யாழ். பொலிஸ் அத்தியட்சகர் எம். சற்குணராஜாவும் சென்றுள்ளார். ஓ-10)

### கண்டியிலும் இரட்டைத்தட்டு பஸ்சேவை

கொழும்பு, பெப் 8

கண்டியிலும் முதலத் தடைவையாக இரட்டைத் தட்டு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிராந்தியப் போக்குவரத்துச் சபை இச் சேவையை நடத்துகிறது. [ஓ-எ]

### சுகாதார சேவை பணிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம், பெப் 8

மாகாண சபையின் சுகாதார சேவைப் பணிப்பாளராக டாக்டர் ஆர். ரி. அருளானந்தம் சுகாதார அமைச்சினால் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார திணைக்கள அத்தியட்சகராகக் கடமை ஆற்றியவர்.

வடக்கு, கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களங்களின் அத்தியாவசிய சேவைகள் இவரின் கீழ் கொண்டு வரப்படும். (ஓ-10)

### தேர்தல் குறித்து மு.க.

சென்னை, பெப் 8

தமிழ் நாட்டில் உள்ளுராட்சித் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று முதலமைச்சர் மு.கருணாநிதி சொன்னார்.

ஊராட்சித்தலைவர்களின் கருத்தரங்கில் பேசுகையில் முதலமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

சென்னை,மதுரை கோயம்புத்தூர் ஆகிய மாநகர சபைத் தேர்தல்களை வருகின்ற ஏப்ரல் மாதத்தில் நடத்தப் போவதாக முதலமைச்சர் ஏற்கனவே அறிவித்திருந்தார். (ஓ-எ)

### அமைதி..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்திய அமைதிப் படையின் தளபதி ஜெனரல் ஏ. எஸ். கல்கத்துடன் நேற்றுக்காலை கொழும்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பேச்சுக்கள் நடத்தினார்.

அதன் பின்னரே இந்திய அமைதிப் படையின் 2 பிரிவுகள் விலக்கப்படும் என்ற தகவல் வெளியிடப்பட்டது.

அமைதிப்படைத் துருப்புக்களில் ஒரு பிரிவு இரண்டொரு தினங்களில் விலக்கப்படும் என்று நேற்றைய உதயனில் செய்திப்பிரத்தியோகமாக வெளியானது தெரிந்ததே. (அ-ஓ-எ)

### சிங்களத்தில் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ராம்.

அதன் பின்னர் அவர்களின் இருவர் வர்த்தகர்கள் அமர்ந்திருந்த அறைக்குள் நுழைந்து இருவரையும் சுட்டுவிட்டு ஓடிவிட்டனராம்

ஒருவருக்குத் தலையில் குண்டு பாய்ந்தது மற்றவருக்கு மார்பில் குண்டு பாய்ந்தது.

இரு வர்த்தகர்களும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

சண்முகத்தின் வயது 65, சுப்பிரமணியத்தின் வயது 63.

புறக்கோட்டை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சித்திரரஞ்சன் தலைமையில் விசாரணை நடைபெறுகிறது. [ஓ-எ]

### குச்சவெளிப் பகுதி படையினரால்சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம் பெப்.8

திருகோணமலையில் குச்சவெளிக் கிராமம் கடந்தவாரம் இந்திய அமைதிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த சோதனைக்குள்ளானது.

கடந்த நான்காம் திகதி இப்பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதம் ஒன்றினையடுத்தே தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அனைவரும் குச்சவெளி மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சிலர் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

### தாக்கல்

சென்னை, பெப். 8

தமிழ்நாட்டில் மருங்காபுரி, மதுரை கிழக்கு ஆகிய சட்டசபைத் தொகுதிகளுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது நேற்று ஆரம்பித்தது

இவற்றுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும்,

சுயேச்சை வேட்பாளர் இருவர் மரணமானதால், இத் தொகுதிகளுக்கு சென்ற மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படவில்லை.

## கொழும்பு—திருமலை ரயில் சேவை மீண்டும்?

கொழும்பு, பெப் 8

கொழும்பு — திருமலை ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் பகல் நேர ரயில்சேவையே நடத்தப்படும் பின்னர் இரவு நேர ரயில்சேவை ஆரம்பிக்கப்படும்.

இதற்காக தற்சமயம் சீனன்வாடி—திருகோணமலைக்கு இடைப்பட்ட ரயில் பாதையை திருத்தி அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்செயல்கள் காரணமாக கொழும்பு திருமலை ரயில் சேவை நிறுத்தப்பட்டு ஒரு வருடமாகிவிட்டது. (ஓ-எ)

### அசம்பாவிதங்களால்

## 83க்கு பின் முல்லைத்தீவில் இறந்தோர் 450 பேர்!

ஒட்டுசுட்டான், பெப்.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1983 ஜூலை மாதத்திலிருந்து சமீப காலம் வரை அசம்பாவிதங்களினால் 450 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் 90 பேர் வரை ஊனமுற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவர்களில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கும் வேலை முல்லைத்தீவு செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-113)

## பரகுவே போதுத் தேர்தல் பற்றி எதிர்க்கட்சிகள் சந்தேகம்

அசுன்சியன், பெப் 8

பரகுவேயில் வருகிற மே மாதம் முதலாம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று புதிய ஜனாதிபதி அன்றின் ரொட்ரிகஸ் அறிவித்தார்.

புதிய நாடாளுமன்றத்துடன் புதிய ஜனாதிபதியும் அப்போது தெரிவு செய்யப்படுவார்.

தான் அத்தேர்தலில் போட்டியிடுவதா என்பது பற்றி ஆளும் கொலராடோ கட்சிதான் முடிவு செய்ய வேண்டும் என்று ரொட்ரிகஸ் சொன்னார்.

இதனிடையில்பொதுத் தேர்தல் என்ற அறிவிப்பு மீண்டும் சர்வாதிகார ஆட்சியைத் தொடர புதிய அதிபர் செய்யும் தந்திரம் என்று எதிர்க்கட்சிகள் வர்ணித்துள்ளன.

தேர்தல் என்பது மக்களை விழுத்தும் ஒரு 'பொறிக் கிடங்கு' என்றும் எதிர்க்கட்சிகள் வர்ணித்துள்ளன. (எ)

### தமிழ்கருடி....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சாமியும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட விஷயம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும்.

தமிழ்க்குடிமகனின் பெயரை முதலமைச்சர் கருணாநிதி முன்மொழிய கல்வி அமைச்சர் அன்பழகன் வழிமொழிந்தார்.

உபசபாநாயகர் பதவிக்கு திரு. துரைசாமியின் பெயரை உணவு அமைச்சர் ஆற்காடு வீராசாமி முன்மொழிய பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன் வழிமொழிந்தார் [உ-எ]

### கூ. சங்கத்துக்கு புதிய லொறி

ஒட்டுசுட்டான், பெப் 9

புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சிலிருந்து ஒரு புதிய போட்சார் கேர் லொறி முத்தையன் கட்டு ப. நோ. கூ. சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ - 113)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சுப்பையா புஸ்பநாதன்

159/5 நல்லலக்சுமி அவெனியூ, கோவில் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த சுப்பையா புஸ்பநாதன் 5-2-89இல் அகால மரணமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் சுப்பையாவினதும், சரஸ்வதியினதும் புதல்வரும், திருமதி கிருஷ்ணபிள்ளை மகாதேவி, திரு. V. S. ஞானசெல்வம் (ஜெகநாதன்) (பிரதேசசபை, வலி-வடக்கு, காங்கேசன் துறை), திருமதி தங்கவடிவேலு சுபத்திரா தேவி (மட்டக்களப்பு), திருமதி தியாகராஜா ரேணுகாதேவி (வாழைச்சேனை), திரு. சு. உருத்திரநாதன் (புளியங்குளம்) ஆகியோரது அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது நல்லூர் இல்லத்தில் 9-2-89 வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை நண்பர்கள் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. S. ஞானசெல்வம்
(ஜெகநாதன்)

(9507)

### செல்லையா மகேந்திரன்

புலோலி சந்தா தோட்டம் செல்லையா மகேந்திரன் டிருக்ரர் உரிமையாளர் 6 ஆந் திகதி மாலை அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதி செல்லையா, லெட்சுமி தம்பதியினரின் ஏக புதல்வனும், இந்திராதேவி, சந்திராதேவி இந்திராணி ஆகியோரின் சகோதரனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், பிரசாந், பிரபாளினி இருவரின் தந்தையும், கமுகாசலம், ஜோர்ஜ், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும், அரவிந்தன், துஷ்யந்தன், வைகுந்தன், ஜெயசி, சோபியா ஆகியோரின் மாமனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியை 09-02-1989 வியாழன் காலை 9 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மைத்துனர்:
அ. கமுகாசலம்.

சந்தா தோட்டம்,
புலோலி.

(9497)

### செல்லத்துரை நாகம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லத்துரை நாகம்மா காலமாகிவிட்டார் இவர் செல்லத்துரையின் அன்பு மனைவியும், நித்தியானந்தன் [நீர்ப்பாசனத் திணைக்களம்] சித்தியானந்தன் [ஓமான்], சச்சிதானந்தன் [லண்டன்] சற்குணநாதன் [அவுஸ்திரேலியா] விபுலானந்தன் [அவுஸ்திரேலியா], ஜெகதீஸ்வரானந்தன் [இலங்கை வங்கி யாழ்ப்பாணம்], கங்காதரன் [அவுஸ்திரேலியா], புஸ்பமலர், குணவதி [பிரான்ஸ்], சந்திரகலா [பிரான்ஸ்] இவர்களின் அன்புத் தாயாரும், வடிவாம்பிகை, சமலம், ஜெசிந்தா, அன்னலெட்சுமி, சந்தி, தியோபிலா, கலாதேவி, கணேசரட்ணம், கணேசநாதன், நிர்மலராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 8-2-89 [புதன்கிழமை] காலை 10 மணியளவில் நடைபெறும்.

நாச்சிமார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

[9360]

### திருமதி அம்பலவாணர் கற்பகம்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அம்பலவாணர் கற்பகம் காலமானார். இவர் அரசாங்க ஒப்பந்தகாரர் திரு. அம்பலவாணரின் [சின்னவாணர்] அன்புமனைவியும், காலஞ்சென்ற பத்மநாதன், ஜெகநாதன், நரேந்திரநாதன், சண்முகநாதன், கமலாதேவி, கயிலாயநாதன், சபாநாதன், சத்தியநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும், லீலாவதி கமலதேவி நவயோகம், கனகலெட்சுமி, பேரம்பலம், சாந்தா, ஆனந்தகல்யாணி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற அமராவதி, Dr. வைத்திலிங்கம், நாகலிங்கம் காலஞ்சென்ற யோகம்மா, ஞானம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 16A, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (9 2 89) கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அ. ஜெகநாதன்

(9508)

உ
சிவமயம்



## திருமண அழைப்பிதழ்

மணமகன்:- ஸ்ரீதரன் (I. C. C. N' Dola, Zambia)
(நடேசபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன்)

மணமகள்:- செல்வகலா
(காலஞ்சென்ற திரு. செல்வரெட்னம்
திருமதி செல்வரெட்னம் தம்பதியரின் ஏக புதல்வி)

இடம்:- நல்லூர் சிவன் கோயில்
நாள்:- 11 - 02 - 1989 சனிக்கிழமை
முகூர்த்தம்:- நண்பகல் 11-40 மணிமுதல் 12-40 மணிவரை

தங்கள் நல்வரவையும் வாழ்த்துக்களையும் விரும்பும்



அழைப்பாளர்கள்:

செ. நடேசபிள்ளை தம்பதியர் — 35/1, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
ஈ. சரவணபவன் தம்பதியர் — நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
திருமதி செ. செல்வரெட்னம் — 26/1, 36-ம் ஒழுங்கை, கொழும்பு-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08 - 02 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd. 292/2 Navalar Road, Jaffna, Wednesday 8th February 1989